
# தீபம்

www.deepam.lk

11.08.2015 - 14.08.2015, தீபம் 4

விலை
10 ரூபா


விடுதலைப்புலிகளின் வேட்பாளர்களை கூட்டமைப்பினர் ஒதுக்கினர்

- கிஷோர் பரபரப்பு பேட்டி



நேற்று
இன்று
நாளை

- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



எமது பிரதிநிதிகள் இப்படித்தான் இருக்க வேண்டும்

- மக்கள் கருத்து



இதனால்த்தான் புகைக்கிறோம்

- யாழ்ப்பாண ஆண்களின் ஒப்புதல் வாக்குமூலம்!


**உள்ளே...**

# வேறுகட்சி உறுப்பினர்கள் தேர்வானால் தமிழ்தேசியத்திற்கு ஆபத்து

**எச்சரிக்கிறார் சித்தார்த்தன்!**

வடக்கு கிழக்கில் தமிழ்தேசிய கூட்டமைப்பை அமோக வெற்றிபெற வைக்க வேண்டியது தமிழர்களின் கடமையென வலியுறுத்தியுள்ளார் தமிழ்தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளரும், புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன். தீபம் ஊடகக்குழுமத்திற்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் அரசியல் பயணத்தில் தீர்க்கமான காலகட்டமொன்றில் நிற்கும் சமயத்தில், தமிழர்கள் அனைவரும் ஒரே யணியில் நிற்கிறார்கள் என்ற செய்தி



உரத்து சொல்லப்படுவதற்கும், பலகட்சி பிரதிநிதித்துவம் ஏற்பட்டால் அரசதரப் பால் இலகுவாக கையாளப்பட்டு இனப் பிரச்சனை தீர்வு திட்டமிட்டு இழுத்தடிக்கப் படுவதிலிருந்து காப்பற்றப்படவும் தமிழ் தேசியக்கூட்டமைப்பை ஏகமனதாக தேர்வு செய்யவேண்டுமென கோரிக்கை விடுத்துள் ளார்.

அவருடனான நேர்காணலில் முக்கிய பகுதிகள் இவை.

**1. இந்த தேர்தலில் ஏன் மக்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களிக்க வேண்டுமென கூறுகிறீர்கள்?**

இப்பொழுது தமிழர்களின் அரசியல்போராட்டம் மிகவும் தீர்க்கமான காலகட்டமொன்றில் நிற்கிறது. தமிழர்களின் இனப்பிரச்சனை விவகாரம் வல்லரசுகளின் கவனத்தில் உள்ளது. இந்தியா, அமெரிக்கா போன்றன அதனை தீர்த்து வைக்க விரும்புகின்றன. ஏனெனில், ஸ்திரமற்ற ஆட்சியொன்றை அவை விரும்பவில்லை. இப்படி ஸ்திரமற்ற ஆட்சிநிலவினால்த்தான் நாடுகளிற்கிடையிலான போட்டிக்களமாகும் இலங்கை. உதாரணமாக இந்தியா, அமெரிக்காவுடன் பகைக்கும் தென்பகுதி ஆட்சியா ளர்கள் சீனாவின் தயவில் ஆட்சிநடத்தலாம்.

இப்படியான சிக்கலான குழப்பங்களை முடிவிற்கு கொண்டுவர, இனப்பிரச்சனையை தீர்க்க அந்தநாடுகள் விரும்புகின்றன.

இந்த சமயத்தில் தமிழர்கள் தரப்பிலிருந்து ஒரேதரப்பைத்தான் அவர்கள் கையாள விரும்புகிறார்கள். பல்வேறு நிலைப் பாடுடையவர்களை மக்கள் தேர்வு செய்வார் களெனில் நமது தரப்பு கோரிக்கைகளை பலமான அழுத்திச் சொல்ல முடியாமல் போய்விடும். தென்னிலங்கை தேசிய கட்சிகள், தமிழ்தேசியத்தை நிராகரிக்கும் கட்சிகளின் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டால், தீர்வுவிவகாரத்தில் தமிழர்கள் ஓரணியில் இல்லையென்று வரும்.

அதுதவிர, வரும் பாராளுமன்ற தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால், தமிழர்கள் மிக ராஜதந்திரத்துடன் செயற்பட வேண்டியிருக்கும். மகிந்ததரப்பை போலல் லாமல், ரணில் மிக நாசூக்காக தமிழர்பிரதி நிதித்துவத்தை தன்கையில் கொண்டு வருவார். பல்வேறு கட்சிகளிலிருந்து வேட்பாளர்கள் தேர்வு செய்யப் பட்டால் ரணில் மிகச்சுலபமாக அவர் களை பிரித்தெடுப்பார். இதனை தடுப்ப தெனில் தமிழர்கள் ஓரணியில் தமிழ்தேசிய கூட்டமைப்பை வெற்றிபெற வைக்க வேண்டும். வடக்குகிழக்கில் 20 ஆசனங்களை கூட்டமைப்பு வெற்றிபெற செய்ய வேண்டும்.

இனப்பிரச்சரனை தீர்வின் பின்னர் பல்வேறு கட்சிகள் இங்கு தாராளமாக செயற்படட்டும். பல்வேறு பிரதிநிதிகளை மக்கள் தேர்வு செய்யட்டும். அதனை நான் வரவேற்கிறேன்.

**2. தமிழ்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ் ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது திம்பு கோட்பாட்டினடிப்டையில்த்தான் தீர்வு காணப்பட வேண்டுமென்று. திம்பு கோட்பாட்டின் அடிப்படையே இணைந்த வடக்கு கிழக்கு என்பதுதான். தற்போதைய நிலையில் வடக்கு கிழக்கு இணைப்பு என்பது சாத்தியமா? வடக்கு கிழக்கு இணைப்பென்ற உங்கள் கோரிக்கையில் முஸ்லீம்களின் நிலை என்ன?**

முஸ்லீம்கள் தமிழ்பேசும் இனம் என்ற பதத்தால் அழைக்கப்பட்டாலும், அவர்கள் தங்களை ஒரு தனித்தேசிய இனமாகவே பார்க்கிறார்கள். தமிழர்களைப் போல, முஸ்லீம்களிடத்திலும் தேசியம் தொடர்பான எண்ணப்பாடுகள் வலுவடைந்து விட்டன. இப்படியான நிலையில் இந்திய இலங்க உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட இணைந்த வடக்கு கிழக்கு என்பது சிக்கலான விடயமாக உள்ளது. ஏற்கனவே நீதிமன்றம் இரண்டு மாகாணங்களையும் பிரித்து தனித்தனி மாகாணமாக்கிவிட்டது.

இந்தபிரச்சனையைதீர்ப்பதெனில் அரசியலமைப்பு சட்டத்தில் சில ஏற்பாடுகளை செய்துதான் தீர்க்க வேண்டும். இனப்பிரச் சனை தீர்வு என்று வந்தால் அதனை செய்துதான் ஆகவேண்டும். இணைந்த

**தொடர்ச்சி 11-ம் பக்கம்**



# தீபஉரை

இன்றும் ஒருவாரத்தில் தேர்தல் பிரசாரங்கள் ஓயவுள்ளன. கடந்த ஒருமாதமாக நீடித்த பிரசாரங்கள் எவையும் மக்களை தட்டியெழுப்பியதாக தெரியவில்லை. இது ஈழத்தமிழர்களின் அண்மைய தேர்தல் வரலாற்றில் புதியது. இப்படியொரு அமைதியை அனுபவித்ததேயில்லை.

ஒன்றில் தமிழர்கள் வரிந்து கட்டிக் கொண்டு நின்றார்கள். அல்லது, ஆட்சியாளர்கள் ஆள்,அம்பு,சேனையுடன் புகுந்து விளையாடி அலப்பறை பண்ணிக் கொண்டிருந்தார்கள். எப்படியோ தேர்தல்கள் பெரும்அமளிதுமளிப்பட்டன. தேர்தல் பற்றி யாரும் அறியாமல் இருக்கவில்லை. வாக்களிக்காமல் இருந்தால் அது பகிஸ்கரிப்பாக மட்டுமே இருந்தது.

இம்முறை காட்சிமாறிவிட்டது. தேர்தல் ஆணையாளர் எவ்வளவுதான் சொன்னாலும், வேட்பாளர்கள் சுவரொட்டிகள் ஒட்டாமல் விடுவதில்லை. என்றாலும், சிறிதுநேரத்திலேயே பொலிசார் வேட்பாளரின் முகத்தில் கரியைபூசி விடுகின்றனர். இது ஒன்றைத்தவிர, வேறெந்த தேர்தல் ஆர்ப்பாட்டங்களையும் காணவில்லை. விற்பனை நிறுவனங்களின் பெண்பிரதிநிதிகள் வீட்டுகதவுகளை தட்டுவதைப்போல, கட்சிகள் இடையிடையே வீட்டுகதவுகளை தட்டுகிறார்கள். அவ்வளவுதான்.

இந்த நடவடிக்கைகள் மக்களை எழுச்சிகொள்ள வைக்கவில்லை. தேர்தலிற்கு இன்னும் ஒருவாரகாலம் இருக்கின்ற நிலையில், மக்களை எழுச்சிகொள்ள வைக்கும் அஸ்திரங்கள் எந்தக்கட்சியிடமும் இருப்பதாக தெரியவில்லை. தமிழ்தேசிய கூட்டமைப்பு தொடக்கம், அங்கஜன் வரை அனைவரிடமும் உள்ள ஒரேயொரு கடைசி அஸ்திரம் பிரபாகரன்தான். அதனை அனைவரும் ஆரம்பத்திலேயே பிரயோகித்து விட்டனர்.

இம்முறை மக்கள் வழக்கத்தைவிட தேர்தலில் அக்கறை காட்டாததற்கு இரண்டு காரணங்களை கூறலாம்.

1.வாக்குகளால் பழிவாங்கப்பட வேண்டிய உடனடி எதிரிகள் யாரும் இல்லாமல் இருப்பது.

2. தமிழ்தேசிய அரசியல்வாதிகள் மீது சற்றே மேலெழ ஆரம்பித்துள்ள விமர்சனங்கள்.

இந்த இரண்டும் இம்முறை தேர்தல்களத்தை சூடுதணிய வைத்துள்ளன. அரசியல் இலட்சியத்துடன் போராடிவரும் இனமொன்றிற்கு ஒவ்வொரு தேர்தலும் முக்கியத்துவமானது. ஒவ்வொரு வாக்கும் போராயுதம். சலிக்காமல் போராடிக் கொண்டிருக்க வேண்டுமென்ற எண்ணத்தை தமிழர்கள் மெதுமெதுவாக இழக்கிறார்களா? அப்படி இழந்தால் அதன் விளைச்சலை தென்னிலங்கை ஆட்சியாளர்கள் அறுத்துக் கொண்டு சென்றுவிடுவார்கள் என்பதை அறியாமல் உள்ளனரா?

இம்முறை நீடிக்கும் இந்த மழுங்கிப் போன தேர்தல் உணர்வு, நிச்சயம் வாக்களிப்பில் மந்தநிலையை காட்டும் என பரவலாக எதிர்வுகூறப்பட்டு வருகிறது. வாக்களிப்பு வீதத்தின் மந்தநிலை நிச்சயம் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு உவப்பானதாக இருக்கப் போவதில்லை. சிறியகட்சிகள் அதன் பலனைப் பெற்றுக்கொள்ளப் போகின்றன.

வழக்கத்தைவிடவும் இந்தமுறை தேர்தல்பரப்புரைச சமயத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு தொடர்பில் விவாதங்கள் மேலெழ ஆரம்பித்துள்ளது. இது இயல்பானதா திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டதா என்பது தெரியவில்லை. எது எப்படியோ, அது மக்களை சற்று ஒதுங்கியிருக்க செய்யலாம்.

இந்த ஒதுக்கம் தேர்தலில் எதிரொலிக்கும். இதனால், அதனை தடுத்து நிறுத்தும் பெரிய வேலைத்தி;ட்டமொன்றை கூட்டமைப்பு ஆராய வேண்டும். தேர்தலில் வாக்களிப்பது தொடர்பான அபிப்பிராயம் பரவலாக உருவாக்கப்பட வேண்டும். ஏனெனில் தமிழர்களின் ஒதுங்கியிருக்கும் போராட்டம் அவர்கள் மட்டும் சம்பந்தப்பட்ட விடயமல்ல. நம்மவர்கள் ஒதுங்கியிருப்பது நாட்டின் தலைவிதியையும் மாற்றிவிடலாம்.


எந்த கட்சிக்கு அல்லது வேட்பாளர்களிற்கு வாக்களிப்பதென்பது உங்கள் கடமை. அந்த எல்லைக்குள் நாங்கள் அத்துமீறி நுழையப்போவதில்லை. உங்களிற்கிருக்கும் அளவுகோள்களை பயன்படுத்தி வேட்பாளர்களை தேர்வு செய்யுங்கள். எந்த சந்தர்ப்பத்திலும் சிபாரிசு அரசியல் செய்ய முடியாதென்பதை சுட்டிக்காட்டுகிறோம்.

நீங்கள் அளிக்காத ஒவ்வொரு வாக்கும், உங்கள் பெயரில் இன்னொரு வேட்பாளரை உருவாக்குகிறதென்பதை நினைவில் நிறுத்துங்கள். அதனால் வாக்களியுங்கள். உங்கள் அயலவர்களையும் வாக்களிக்க ஊக்கப்படுத்துங்கள்.

**- ஆசிரியர்,**
**தீபம்**

**அலுவலகம்**
**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
**தொலைபேசி**
யாழ்ப்பாணம்: 0212216633 ஐக்கிய ராச்சியம் 00442034687086
மின்னஞ்சல்: info@deepamtv.tv

# சொன்னார்கள்



**சுமணதாச - சோதிடர்**

அரசியல் ஆரூடம் கூறும் பணியை 1994 இல் ஆரம்பித்தேன். எனது பயணத்தில் தவறான விடயம் நடந்தது கடந்த ஜனாதிபதி தேர்தல் சமயத்தில்த்தான். இந்த தேர்தலில் யார் களமிறங்குவார் என்பதையே ஊகிக்க முடியாமல் இருந்தது. அந்த சம்பவத்தின் பின்னர் இனிமேல் அரசியல் ஆரூடம் கூறுவதில்லையென முடிவு செய்துவிட்டேன்.



**சந்திரிகா குமாரதுங்க - முன்னாள் ஜனாதிபதி**

அரசியலிலிருந்து விலகி அமைதியாக வீட்டில் இருந்தேன். மகிந்த தலைமையிலான துஷ்ட சக்திகளாலேயே மீண்டும் களமிங்க வேண்டியதாகியது. நான் சுதந்திரக்கட்சிக்காரி. சுதந்திரக்கட்சியிலேயே பிறந்தேன். அதிலேயே இறப்பேன். ஒருபோதும் ஐக்கிய தேசியக்கட்சி மேடைகளில் ஏறப்போவதில்லை.



**யஸ்மின் சூக்கா - சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான தலைவி**

இலங்கையில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்பில் எம்மிடமுள்ள ஆவணங்களை இலங்கை அரசுடன் பகிர்ந்து கொள்ள தயார். இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும். எனினும், இவை மிகத்தீவிரமான நிலையை ஏற்படுத்தும். அதனால் மிக கவனமாக செயற்பட வேண்டும்.



**அநுரகுமார திசநாயக்கா - ஜே.வி.பி**

இருபது வருடங்களின் பின்னர் இப்பொழுதுதான் சுதந்திரக்கட்சி தனது சொந்தப்பணத்தை செலவழித்து தேர்தல் பிரசாரம் செய்கிறது. இதுவரை அரச சொத்தை பயன்படுத்தியே தேர்தல்களை வென்றார்கள். இப்பொழுதுதான் அதன் அருமையை அறிந்து கொண்டிருப்பார்கள்.



**மகிந்த ராஜபக்ச - ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு**

புலிகளிற்கு நான் நிதி வழங்கியதாக கூறப்படுவதை மறுக்கிறேன். அந்த குற்றச்சாட்டை நானும் பார்த்தேன். இப்பொழது அதை கேட்க பிரபாகரன் உயிருடன் இல்லை. புலிகளுடன் உறவிருந்தால் எப்படி அவர்களை அழித்திருக்க முடியும்? புலிகளிற்கு யார் ஆயுதம் வழங்கியதென்பது உங்களிற்கும் தெரியும்தானே.




**விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா)**

தேசியக்கட்சிகளிற்கு வாக்களித்து மாற்று தலைமைகளை உருவாக்காமல் தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கே வாக்களிக்க வேண்டும். கடந்த காலங்களில் தேசிய கட்சிகளிற்கு வாக்களித்து ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இதனால்த்தான் இம்முறை தேசியகட்சிகளில் போட்டியிடவில்லை.




**மைத்திரிபால சிறிசேன - ஜனாதிபதி**

பாராளுமன்ற தேர்தலில் போதிய தகைமை கொண்டவர்களையும் கறைபடியாதவர்களையும் தெரிவு செய்யும் பொறுப்பு வாக்காளர்களிற்கு உள்ளது. தெரிவு செய்யப்படுபவர்கள் மக்களிற்கு சேவை செய்யக்கூடியவர்களாகவும், பாராளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.



**ரணில் விக்கிரமசிங்க - பிரதமர்**

2005 இல் பிரபாகரனிடமிருந்து எனக்கு செய்தியொன்று வந்தது. அதாவது, அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ச பெருந்தொகை நிதி தந்து ஒப்பந்தமொன்று செய்துள்ளார் என்றும், என்னிடமும் பணம் வாங்கி ஒப்பந்தம் செய்ய தயாராக உள்ளதாகவும் கூறப்பட்டது. எனினும் நான் அதை மறுத்துவிட்டேன்.



**டி.எம்.சுவாமிநாதன் - மீள்குடியேற்றம், இந்துகலாசார அமைச்சர்**

இந்து ஆலயங்களில் மிருகபலியிடக்கூடாது. அடுத்த ஆட்சியில் இந்ததுறைக்கு பணியாற்ற கிடைத்தால், மிருகபலிக்கெதிரான சட்டமூலத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு வருவேன். இதுபற்றி பிரதமர் ரணிலுடனும் பேசியுள்ளேன்.



**பத்மினி சிதம்பரநாதன் - தமிழ்தேசிய மக்கள் முன்னணி**

போரினால் பல பாதிப்புக்களை பெண்களே அனுபவித்து வருகின்றனர். கணவனை இழந்தும், அங்கவீனமுற்றும், காணாமல் போயும், பெண் தலைமைத்துவ குடும்பங்களாகவும் பெண்களே போரின் வலிகளை சுமந்து வருகின்றனர்.



**விஜயகலா மகேஸ்வரன் - ஐக்கிய தேசியக்கட்சி**


எமது மக்களின் பிரச்சனைகளிற்காக நான் குரல் கொடுக்கும்போது எனக்கு தென்பகுதியில் புலி முத்திரை குத்துகிறார்கள். இனப்படுகொலையாளிகளே இதனை செய்கிறார்கள். முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களிற்கு நான் அஞ்சலி செலுத்தியபோதும் அப்படி சொன்னார்கள்.




**நாமல் ராஜபக்ச - ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு**

வாசிம் தாஜூதீனை சிறுவயது முதலே அறிந்து வைத்திருக்கிறேன். அவரது மரணம் தொடர்பில் முறையான விசாரணை நடத்துவதை விட்டு, ராஜபக்ச குடும்பத்தின் மீது குற்றம்சுமத்துவது முறையற்றது. வாசிம் தாஜூதீனின் குடும்பத்திற்கு அநீதி இழைக்கப்பட்டிருந்தால், அவர்களிற்கு நியாயத்தை பெற்றுக்கொடுப்பதில் எந்த தவறும் இல்லை







# விடுதலைப்புலிகளின் வேட்பாளர்களை கூட்டமைப்பினர் ஒதுக்கினர்

**கிஷோர் பரபரப்பு பேட்டி**

தமிழர்விடுதலைக்கூட்டணி சார்பில் வவுனியாவில் களமிறங்கியுள்ள வேட்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோருடனான நேர்காணல்.

**நீண்ட இடைவெளியின் பின்னர் பாராளுமன்றத் தேர்தலில் நிற்பதற்கான காரணம் என்ன?**

ஒரு நீண்ட இடைவெளியும் இல்லை. 2004ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டேன். 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளால் நியமிக்கப்பட்டவர்களுக்கு இடமில்லை என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் கூறினார்கள். நான் செய்த சேவைகளை மக்கள் அறிவார்கள். என்னை நிராகாரித்த பின்னர் சுயேட்சையாக களமிறங்க முயன்றேன். நேரங்கள் போதாமையால் அரசாங்கத்தடன் கேட்பதற்கு முடிவு செய்தேன்.

**நீங்கள் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் உங்கள் செயற்பாடுகள் எப்படி இருக்கும்?**

கடந்த காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து சேவையாற்றியது உங்களுக்குத் தெரியும். அதேபோல இலங்கை செஞ் சிலுவைச்சங்கத்திலிருந்து செய்த சேவைகளை மக்கள் அறிவார்கள். மன்னார் வீதியிலிருக்கும் பல்கலைக்கழகத்திற்கு 160 ஏக்கர் காணி பெற்றுக் கொடுத்து கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றது. வவுனியாவில் தாதிய பயிற்சிக்கல்லூரியினைக் கொண்டு வந்தேன். சிறைச்சாலைகள் உருவாக்கப்பட்டு வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு கொண்ட செல்லாமல் வவுனியாவில் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கையினை மேற்கொண்டேன். தொழிநுட்பக்கல்லூரிக்கான வசதிகளை செய்து கொடுத்துள்ளேன். பத்திரிக்கைகளில் மட்டும் அறிக்கைகளை விட வில்லை. சேவை செய்து செயலில் காட்டியவன் தான் நான். யுத்த காலத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து யாரும் செல்ல முடியாமல் இருந்த பிரதேசங்களுக்குச் சென்று சேவையாற்றியவனும் நானே. ஆயுதங்களக்குப்பயந்து வெளிநாட்டிலும், கொழும்பிலும் ஒளிந்து இருந்து விட்டு தற்பொது தேர்தலில் குதித்தும் உள்ளார்கள் தேர்தலுக்காக வந்தும் உள்ளர்கள். யுத்தகாலத்தில் நான் மக்களை விட்டு எங்கும் ஓடவில்லை. மக்களுடனே இருக்கிறேன்.

**நீங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினை தெரிவு செய்வதற்கான காரணம் என்ன?**

தமிழர் விடுதலைக் கூட்டணி தந்தை செல்வா, தொண்டமான், ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியோரால் 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு அதன் பின்னர் எல்லோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்டார்கள். 2001ஆம் ஆண்டும் இதே கட்சியில்தான் போட்டியிட்டார்கள். அதன் பின்னர்விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற கசப்பான நிகிழ்விற்குப் பின்னா, திடீரென 2004ஆம் ஆண்டு தேர்தல் வந்ததால் அப்போது ஆனந்த சங்காஜீ ஜயா தலைவராக இருந்தார். அவருடன் கதைத்து முடிவு எடுக்க நேரம் இன்மை காரணமாக தமிழரசுக்கட்சில் போட்டியிடுமாறு விடுதலைப் புலிகள் சொன்னார்கள். நான் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டேன். ஆனாலும் அக்கட்சியினை வழி நடத்தியவர்கள் விடுதலைப் புலிகள். அவர்கள் மௌனித்த பின்பு 2010ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் விடுதலைப்புலிகள் நியமித்த உறுப்பினர்களை தமிழரசுக்கட்சியினர் நிராகரித்ததன் காரணமாக ஒதுங்க வேண்டி ஏற்பட்டது. என்றாலும் இம் முறை 2015 நடைபெறும் தேர்தலில் தமிழரசுக்கட்சியினாரிடம் நியமனப்பத்திரம் கொடுத்து அவர்களால் ஒதுக்கப்பட்ட காரணத்தினால் இனியும் இவர்களிடம் நியமணப்பத்திரத்திற்காக கெஞ்சிக் கொண்டிராமல் எனக்கு ஒரு கட்சி தேவை என்பதை உணர்ந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் என்னை அழைத்ததிற்கு இணங்க 2015ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட முடிவு எடுத்தேன்.

**தமிழ் மக்களின் தீர்வுத் திட்டம் விடயத்தில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?**

வடக்கு கிழக்கு இணைப்பு முக்கியம் அதில் எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது. வடக்கு கிழக்கு இணைந்த மாகாணத்தில் மக்கள் சுதந்திரமாக மாற்று இன மக்களுடன் ஒற்றுமையாக சேர்ந்து வாழவேண்டும். அதற்கான உரிமைகளை விட்டுக கொடுக்கவும் முடியாது.

**முன்னர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் விட்ட தவறுகள் என எதை உணருகின்றீர்கள்?**

நான் எந்தத்தவறும் செய்யவில்லை. நான் ஒளிந்து இந்தியா போய் நிற்கவில்லை. வெளிநாடும் செல்லவில்லை. மற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மாதிரி பின் கதவால் சென்று எதனையும் பெற்றுக் கொள்ளவும் இல்லை. மக்களின் தேவைகளை வெளிப்படையாக பாராளுமன்றத்திலும், அமைச்சர்களிடமும் கதைத்து வவுனியா மாவட்டத்திற்குப் பெற்றுக் கொடுத்துள்ளேன்.

**மக்களிற்கு எதையாவது கூற விரும்புகிறீர்ளா?**

நல்லவர்களை, மக்களுக்கு சேவையாற்று பவர்களை, வெளிநாட்டில் சென்று இருப்பவர் களைவிட, சட்டத்தின் முன் குற்றம் அற்றவர்களை, குறிப்பாக போதைவஸ்து விநியோகம் செய் யாத அரசியல் வாதிகளை இனங்கண்டு வாக்க ளித்து பாராளுமன்றம் அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் இம் முறை வன்னி மக்களாகிய நீங்கள் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டத்தினை சேர்ந்த மக்கள் கடந்த முறை யுத்த நேரத்தில் என்னை பாராளுமன்றம் அனுப்பினீர்கள் இம் மறை சமாதானமான நேரத்தில் ஆயுத கலாச்சாரம் இல்லாத நேரத்தில் எனக்கு சந்தர்ப்பத்தினை வழங்கி எனது செயற்பாடுகளையும், எனது சேவையினையும் பார்க்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

## அரசியல் கிசு கிசு

இருந்து இருந்து பார்த்தார் கிழக்கு 'அம்மான்'. ஒன்றும் சரிவரவில்லை. இப்படியே இருந்தால் புதிய மனைவிகூட மறந்துவிடுவார் என்பது புரிந்ததும் அதிரடியாக அறிக்கைவிட்டுள்ளார். 'என் அன்புக்குரிய சொந்தங்களே.. இரத்தத்தின் இரத்தங்களே.. அனைவரும் கூட்டமைப்பிற்கே வாக்களியுங்கள் என அந்தர்பல்டி அறிக்கை விட்டுள்ளார்.

இந்த செய்தியை கேட்டவர்களிற்கு தலைச்சுற்றல் வந்திருக்கும். பழைய பயில்வான் காலத்தில் என்ன பேச்சு பேசிய மனுசன்.. ஒரே தாவாக தாவி இப்படி பேசுகிறாரே என்றுதான் முணுமுணுக்கிறார்கள்.

இந்தப் பேச்சு ஏதும் தூதாக இருக்கலாமோ என 'வீட்டுக்காரர்' வெலவெலத்துப் போயுள்ளனராம்.

யாழ்ப்பாணத்தில் நடந்த பெரிய தேர்தல் வன்முறை ஒரு கட்சி அலுவலம் அடித்து உடைக்கப்பட்டிருந்ததுதான். மற்றும்படி பெரிய வன்முறையொன்றும் நடக்கவில்லை. அந்த அலுவலகம் உடைப்பு பற்றி இப்பொழது மெல்லமெல்ல தகவல்கள் கசிந்துள்ளது.

யாழ்ப்பாண பச்சை கட்சிக்காரர்களிற்குள் சரியான லடாயாம். ஆளையாள் பிடித்து தின்பதைப்போல நிற்கிறார்களாம். திடீரென என்ன நடந்தது? எல்லாத்திற்கும் காரணம் பிரபாகரன்தானாம்.

அண்மையில் பச்சைத்தலைவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். வந்தவரை வரவேற்றது 'அம்மணி' இல்லை. டொக்ரர்தான். இதை தலைவர் திட்டமிட்டுத்தான் செய்தாராம். எலக்சன் பிரசாரங்களில் அம்மணி பெண்புலிபோல பிரசாரம் செய்வது தலைவரிற்கு பிடிக்கவில்லையாம். தெற்கில் வேறு நெருக்கடி. இதனால்த்தான் அம்மணியை வெட்டிவிட்டுள்ளார்.

சிங்கத்தின் கோட்டைக்குள் புகுந்தது மட்டுமில்லை, சிக்கனும் கேட்ட கதையாக அம்மணிக்கு கோபம் பொசுக்கென்று வந்துவிட்டதாம். அதன் விளைவுதானம் இந்த உடைப்பெல்லாம்.


## தீபம் பத்திரிகை கிடைக்கும் இடங்கள்

**யாழ்ப்பாணம்**

மொடேன் ஸ்ரோஸ், நெல்லியடி

சதாபொன்ஸ், மாலுசந்தி

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்க்கு அருகாமை

**கிளிநொச்சி**

அகரன் பத்திரிகை, தொலைபேசி 0773083965 (பொலிஸ் நிலையம் அருகாமை கிளிநொச்சி)

உதயன் புத்தகசாலை, தொலைபேசி 0776303627 (கிருஸ்ணன் கோவில் வீதி கிளிநொச்சி)

**வவுனியா**

கே பி கே புத்தகசாலை, வவுனியா பேருந்து நிலையம்

பேபி நீட்ஸ் புத்தக நிலையம், தொலைபேசி 0779446293, குருமன்காடு வவுனியா

கிருபாஸ் புத்தக நிலையம், தொலைபேசி 0777204201 இல 185 மன்னார் வீதி, குருமன்காடு வவுனியா

**மன்னார்**

சோதி புத்தக நிலையம் தொலைபேசி 0776946645, பெரிய கடை மன்னார்




ஏனைய மாவட்டங்களில் அனைத்து முண்ணனி புத்தக கடைகளிலும் கேட்டு வாங்குங்கள்.

## இணைய ஜன்னல்

**Ahilan Nadarajah**
உயர்தரப் பரீட்சையில் சமூக அந்தஸ்துக்காக டொக்ராக வேண்டும் இஞ்ஜினியராக வேண்டும் என்ற நோக்கத்தோடு எழுதிகிறவர்களை விட ' உனக்கு நான் ஆரெண்டு காட்டுறன்டி' என்ற நெருப்போடு எழுதிகிற பெடியள் ஸ்கோர் பண்ணுகிறார்கள் என்று ஒரு புள்ளிவிபரம் சொல்லுது. லவ் பண்ணி சொதப்புங்க தம்பிகளா. **Failure** என்ற வார்த்தையில் தான் **Fire** உம் இருக்கிறது. ( அட அட அட )

**Iroshan Puviraj**
களைப்பான நேரத்தில் பேரூந்து பின் வாசல் இருக்கையில் அரிதாக இடம் கிடைத்ததும் ஒவ்வொரு தரிப்பிடத்திலும் நிறுத்தம் செய்யும் போது கர்ப்பிணித்தாயோ, முதியவரோ நமக்கருகில் வந்துவிடக்கூடாது என்று வேண்டுகிறது இந்த பைத்தியக்கார மனசு.

**Ashroff Shihabdeen**
நாட்டில் இன்றைய நிலையில் நுளம்புகளை விட அரசியல் பின்னூட்டக்காரர்களின் தொகை அதிகம். தமிழைத்தான் பிழை பிழையாக எழுதுகிறார்கள் என்று வருந்திக் கொண்டிருக்கும் வேளை தங்கிலீஷில் போடுகிறார்கள் பாருங்கள் பின்னூட்டம். எந்தப் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருந்தாலும் அதைப் படித்துப் புரிந்து கொள்ள முடியாது. கொடுமைடா சாமி!

# பாராளுமன்றம் சென்றால் என்ன செய்வார்கள்?

பாராளுமன்ற தேர்தல் களத்தில் அரசியல்கட்சிகள் அமோக வாக்குறுதியளித்து வருகின்றன. கட்சிகளின் வாக்குறுதிகளை பார்த்தால், விரைவில் தமிழர்களின் பிரச்சனைகளை தீர்த்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள் போலுள்ளது. அப்படி வாக்குறுதிகள் அள்ளிச் சொரிந்து வருகிறார்கள்.

இந்தநிலையில், சில வேட்பாளர்களை அணுகி அவர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டால் முதலில் செய்யப் போகும் நடவடிக்கை என்னவென்பதை கேட்டோம்.

**மதனி நெல்சன்**
**தமிழ்தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்**



'யுத்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் தேவைகளை இனங்கண்டு, செயற்படுத்துவதற்கு தற்போதைய சூழலில் பெண்களின் பங்களிப்பு போதாதுள்ளது.

வட்க்கைப் பொறுத்தவரை பெண்கள் தற்போது தனியாக இயங்குவதற்கு முன்னேறியுள்ளனர். இத்தகைய சூழலில் அவர்களுக்கான உதவிகளை மெற்கொள்வதே எனது நோக்கமாகக் கொண்டு செயலாற்றவுள்ளேன்.

காணாமற்போனோர், விதவைகளாக்கப்பட்டோர், யுத்தத்தால் பாதிக்கப்பட்டோர் அவர்களுக்கான வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துவதற்கு உதவித் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

பாராளுமன்றத்தில் 30 சதவீதம் பெண்கள் உள்வாங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டுவருகிறது. அதன் அடிப்படையில் எமது பிரதிநிதித்துவம் பாராளுமன்றில் இருக்க வேண்டும் என்பதை விரும்புகிறேன்.

இதற்கமைய எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ்மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதே எனது நோக்கமாகும்.

எனவே எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் என்னையும் ஒரு பிரதிநிதியாக மக்கள் தெரிவு செய்வதன் ஊடாக தற்போது பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு எதிர் வரும் காலத்தில் பெண்களின் முன்னேற்றதுக்காக முழுப் பொறுப்பையும் ஏற்று செயற்படமுடியும் என்று நான் நம்புகிறேன்' என்றார்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**தமிழ்தேசிய மக்கள் முன்னணி**

'எமது தாயகத்தின் அபிவிருத்தித் திட்டங்களை சூழல் (பௌதீக, உயிரியல், தாவர வளங்கள்) சமநிலையை பேணும் வகையில் மேற்கொண்டு, சுற்றுச்சூழலை பேணிப் பாதுகாப்பதற்கான செயற்



திட்டங்களை நடைமுறைப்படுத்துவதையே நாம் முன்னிறுத்தியுள்ளோம். அதுமட்டுமன்றி எமது தேசத்தின் பண்பாட்டுத் தனித்துவங்களையும், பாரம்பரியங்களையும் காலத்திற்கேற்ப பேணும் வகையில் அபிவிருத்தியை மேற்கொண்டு எதிர்கால சந்ததியினரை உயிரூட்முள்ளவர்களாக வளர்ப்பதே எமது இலக்காகும்.

அத்துடன் தமிழர் தாயகம் செல்வம் கொழிக்கும் கடல் வளத்தையும், வளமான விவசாய நிலப் பரப்பையும், கனிம வளங்களையும் கொண்டதாய் உள்ளது. இந்த வளங்களை எமது மக்கள் வேலை வாய்ப்பும், உயர்மட்ட வருவாயும் பெறும் வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதாய் எமது செயற்பாடுகள் அமையும்.

> **யுத்தம் காரணமாக மக்கள் வாழ்வாதார ரீதியாகப் பல்வேறு இடர்களைச் சந்தித்துள்ளனர். எனவே முதலில் அவர்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுப்பதே எனது முதல் நோக்கமாகும்.**

குறிப்பாக எங்கள் மண்ணில் எங்கள் காலில் நின்று நீடித்து நிலைத்த அபிவிருத்தியை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை படிப்படியாக உயர்த்துவதற்கான நடவடிக்கையை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தொடர்ந்தும் கைக்கொள்ளும். என்றார்.

**மதியழகராசா**
**தமிழர் விடுதலைக்கூட்டணி**

'வடக்கிலுள்ள மக்கள் நீண்டகால யுத்தம் காரணமாக பொருளாதார ரீதியாக நலிவுற்றுக் காணப்படுகின்றனர்.அவர்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்தவும், எதிர்காலத்தில் நிலைத்திருக்கக்கூடிய பொருளாதாரக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தவும் நாம் படுபடுவேம்.

குறிப்பாக நலன்புரி முகாம்களில் நீண்டகாலமாகத் தங்க வைக்கப்பட்டிருக்கும் வலி.வடக்கு




மக்களை அவர்களது சொந்த நிலங்களில் மீளக்குடியமர்த்துவதை உறுதிப்படுத்தும் வகையில் எமது செயற்பாடுகள் அமையும்.

அத்துடன் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், நீண்டகால அகதி வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையிலும் நாம் அரசுக்கு தொடர்ந்து அழுத்தத்தைக் கொடுத்து செயலாற்றுவோம் என்று உறுதிபடத் தெரிவிக்கிறேன் என்றார்.

**வே.கணேஷ்வரன்**
**சுயேச்சைக்குழு இல 06 வேட்பாளர்**

'யுத்தம் காரணமாக மக்கள் வாழ்வாதார ரீதியாகப் பல்வேறு இடர்களைச் சந்தித்துள்ளனர். இதனை யாரும் கருத்தில் கொள்வதில்லை. இதனால் நலிவடைந்த




மக்கள் மேலும் துன்பங்களையே எதிர்நோக்கிவருகின்றனர்.

எனவே முதலில் அவர்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டங்களையும், வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதே எனது முதல் நோக்கமாகும்.

இதற்பின்னரே மக்களது உரிமைப் பிரச்சினையை முன்னிறுத்தி எதிர்கால அரசியல் தீர்வு குறித்து செயற்படமுடியும். மக்களை ஏமாற்றி, அவர்களை வாழ்வாதார ரீதியாக பாதிப்படையச் செய்து விட்டு வெறுமனே அரசியல் பேசிக் கொண்டிருப்பதால் எந்த நன்மையும் எமக்கு கிடைக்கப்பேவதில்லை.

எனவே மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, அவர்களது அடிக்கட்டுமானங்களை நிலைபெறச்சேய்வதே எனது முதல் நோக்கமாக இருக்கும்' என்றார்.

## க்ளிக் பக்கம்



Night Photography வகைப் படங்கள் எடுப்பது எனக்கு எப்போதும் பிடித்தமான விடயம். மின்னொளியில் அழகாய் ஒளிரும் குருநகர் வேளாங்கன்னி ஆலயத்தை அந்தி வானின் பின்னணியுடன் படம் பிடிக்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவாய் இருந்தது. ஒரு திருவிழா நாளின்போது விசேடமான மின்விளக்குளால் அலங்கரிக்கப்பட்ட நாளை நான் தவறவிடவில்லை. படத்தின் ஷார்ப்னஸ், மற்றும் மின்விளக்குகள் நட்சத்திரங்களைப் போன்று படத்தில் தோன்றுவதற்கான கமராவின் செட்டிங்கில் கவனம் செலுத்தினேன். என்னுடைய 10mm லென்ஸ் சிறந்த ஒரு ஒரு வைட் ஆங்கிள் ஷொட்டை எடுப்பதற்கு உதவியது.

**என்னைப்பற்றி:** நான் குகரூபன். கிராஃபிக் டிசைனராக பணிபுரிகிறேன். ஒளிப்படங்கள் எடுப்பது என்னுடைய முக்கியமான பொழுதுபோக்கு, அவற்றைப் போட்டிகளிற்கு அனுப்பி விருதுகளையும் வென்றிருக்கிறேன். அவற்றில் குறிப்பிடத்தக்கது சார்க் அமைப்பினால் நடாத்தப்பட்ட புகைப்படப் போட்டியில் கிடைத்த ஸ்பெஷல் மென்சன் அவார்ட்.

படப்பிடிப்பாளர்: குகரூபன் இடம்: குருநகர் வேளாங்கன்னி ஆலயம்



# நாடாளுமன்றத் தேர்தல் 2015

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தன்னம்பிக்கை தன்னிறைவு தன்னாட்சி

## எமது எதிர்காலம் எமது கையில்...

X 3



## ம.ஆ.சுமந்திரன்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், சிரேஸ்ட சட்டத்தரணி)
இலங்கை தமிழரசு கட்சி

# நேற்று இன்று நாளை

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

2009 மேமாதத்தில் யுத்தம் நிறைவுற்ற போது தமிழர் நிர்க்கதியுற்றவர்களாக, அநாதைகளாக விடப்பட்டிருந்தனர். எமது இராஜதந்திர மூலதனம் சிதறடிக்கப்பட்டிருந்தது. சர்வதேச மட்டத்தில் தமிழரது குரல் நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டதன் பலன்களை இலங்கை அரசு அனுபவித்துக்கொண்டிருந்தது. இலங்கை அரசின் யுத்த வெற்றியும் இதன் நேரடி விளைவே. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழரது ஜனநாயகத்தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் ஒருபோதும் எதிர்பார்த்தி ராதவகிபாகத்தை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. யுத்தத்தில் தோல்வியுற்ற, சக்தியற்ற, சோர்வுற்ற ஒரு இனத்திற்குத் தலைமைதாங்க வேண்டியமா பெரும் பொறுப்பு அதன் மேல் விழுந்தது. அன்று 300,000 தமிழ்மக்கள் முட்கம்பிகளின் பின்னால் அடைக்கப்பட்டிருந்தனர். சர்வதேச சமூகத்தின் ஆதரவு இலங்கையின் பக்கம் இருந்தது; ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசைப்போரினை வெற்றிகரமாக நிறை வேற்றியதைப் பாராட்டி தீர்மான மொன்றை நிறைவேற்றியது. அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு மகிந்த ராஜபக்சவே இலங்கையின் ஜனாதிபதி என்கிற நிலைமை முற்போக்கு சக்திகளை மௌனிக்கச் செய்திருந்தது. இந்தச் சவால் நிறைந்த சந்தர்ப்பத்தில் தனது கட்சிக்கும், தமிழ் இனத்துக்கும் தலைமை தாங்கியவர் திரு. இராஜவரதோயன் சம்பந்தன் ஆவார்.

சம்பந்தன் ஒரு மூத்த அரசியல்வாதி. திருகோணமலையில் போட்டியிட வென்று பெருந்தலைவர் தந்தை செல்வாவினால் தனிப்படத் தெரிவு செய்யப்பட்டவர். இரு தடவைகள் மறுதலித்த போதும், இறுதியில் தேர்தலில் போட்டியிட இணங்கினார். இதற்கென அவர்தனது கீர்த்தி மிக்க சட்டத்துறைத் தொழிலினைத்துறந்தார். தனது சகசட்டத்தரணிகளிடம் தன்னிடமிருந்த 600 வழக்குகளைப் பகிர்ந்தளித்துவிட்டுப் பாரளுமன்றம் சென்ற இவருக்கு தமிழருக்கென மாபெரும்சவாலை எதிர்த்துக் வழக்காடவேண்டிய பொறுப்புவீழ்ந்தது.

தமிழர் தமது பேரம்பேசும் சக்தியினை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் குறைந்தது மூன்று நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்றுணர்ந்தசம் பந்தன் அவற்றை அடையச் செயற்பட்டார். தமிழரது ஜனநாயகப்பலத்தை உறுதிசெய்தல், இராஜதந்திர செயற்றிட்டம் ஒன்றைவகுத்தல், ஓரளவேனும் நட்புணர்வுகொண்ட அரசாங்கத்தைக் கொழும்பில் நிறுவுதல் என்பவையே அவையாகும்.

முதலாவதாக, தமிழர்கள் யாவரும் ஒருமித்த ஜனநாயகக்குரலில் பேசுவதற்கென சம்பந்தன், ராஜபக்சவினால் நெருங்கமுடியாத, சிதைக்கமுடியாத கட்சிக்கட்டமைப்பை உருவாக்கத் தலைப்பட்டார். இது இலகுவான காரியமாக இருக்கவில்லை. 2009 உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தோல்வியடைந்தது. 2010 பொதுத்தேர்தலில் சற்று முன்னேற்றகரமான பெறு பேற்றை அடைந்தபோதிலும் ஒட்டு மொத்தமாக கூட்டமைப்பால் 14 ஆசனங்களை மாத்திரமே பெற்றுக்கொள்ளமுடிந்தது 2004 தேர்தலின் பின்னான பாராளுமன்றத்தில் 22 ஆசனங்களை கூட்டமைப்பின் கைவசமிருந்தது. கட்சி ஆதரவாளர்கள் தேர்தல்களத்தில் குதிக்கப்பயந்தனர். இலங்கை அரசுசார் ஆயுதக் குழுக்களிடம் ஆயுதப்பலமும், சட்டத்திலிருந்து சுதந்திரமும், மிதமிஞ்சிய பணப் பலமும் இருந்தது. இந்த இறுக்கமான பிடியிலிருந்து விடுபட தமிழ்த்தரப்பின் ஏகோபித்த அரசியற் சக்தியாக தமிழ்த்தேசியக்கூட்டமைப் பினைமாற்றுவதே ஒரேவழியென சம்பந்தன்



பொட்ஸ்வானா வெளிவிவகார அமைச்சருடன் சுமந்திரன்

கண்டு கொண்டார். கூட்டமைப்பு மாத்திரமே தமிழருக்கென தனித்துவமிக்க, சுதந்திரமான குரலாக ஒலிக்க வல்லது. இதற்கென அவர் மாற்றுக் கருத்துக்கள் கொண்டவர்கள் பலரையும் கூட்டமைப்பில் இணைத்தார். எதிரிகளுக்கும் மேசையில் இடம் வழங்கப்பட்டது. கட்சியின் முக்கிய இலக்குகளோடு உடன் பட்டயாவரும் கட்சிக்குள் வரவேற்கப்பட்டனர். இது கட்சிக்குள் சில முரண்பாடுகளைத் தோற்று வித்தாலும் சம்பந்தனது தலைமைத்துவமும், அவர் மீது மக்களுக்கு இருக்கும் உயரிய மரியாதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒற்றுமையான, பலம்கொண்ட அரசியற்கட்சியாக மாற்றியது. இதில் தமிழ்மக்களது நல்வாழ்வையே தனது மூச்சாகவும், தனது உயிரைக்கூட தமிழரது அரசியற் போராட்டத்திற்கு அர்ப்பணிக்கத் துணிந்த மாவைசேனாதிராஜாவின் பங்களிப்பும் அளப்பரியது. முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ச பின் பொருநாள்தான் பாராளுமன்றத்தில் இருந்த அனைத்துக்கட்சி களையும் அக்குவேறாக ஆணி வேராகப்பிரித்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நெருங்க முடியவில்லை என்று கூறியதாகத் தகவல். இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குத் தமிழ் மக்களிடையே அமோக ஆதரவு இருக்கின்றது. யாழ் மாவட்டத்தில் 2010 பொதுத் தேர்தலில் 65000 வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றேவருடங்களின் பின்னர் நடந்தவட மாகணசபைத்தேர்தலில் 250,000 வாக்குகளைப் பெற்றுக்கொண்டது. இது ஒரு அபரிமிதமான 400% வாக்குவங்கிவளர்ச்சியாகும். இந்தவளர்ச் சிக்குப் பலர் பங்களித்திருந்தாலும், பிரதானமாக இராஜவரோதயன் சம்பந்தனுக்கும், அவரைத் தொடர்ந்து தமிழரசுக்கட்சியின் தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜாவுக்குமே இதற்கான புகழ் சென்றடைய வேண்டும்.

இரண்டாவதாக, சம்பந்தன் தமிழரது நலிவடைந்து போயிருந்த இராஜதந்திர வலிமையினை புதுப்பிக்கத் தலைப்பட்டார். பிராந்தியமற்றும் சர்வதேச வல்லரசுகளான இந்தியாவையும், அமெரிக்காவையும் தமிழர்தரப்பை ஆதரிக்கவும் ராஜபக்ச அரசை எதிர்க்கவும் வழிசெய்யவதே அவரது பிரதானதிட்டமாக இருந்தது. இதனைச் செய்யவென சம்பந்தன் சட்டத்தரணி மதியாபரணம் சுமந்திரனை கட்சியின் இராஜதந்திர நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக அமர்த்தினார். மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்பு விடயங்களில் புகழ்பெற்ற சட்டத்தரணியானசு மந்திரனால் இராஜதந்திர வட்டங்களில் சம அந்தஸ்துள்ள வராக உறவுகளைப் பேணமுடிந்தது. தனது மொழித் தேர்ச்சியாலும், நுணுக்கமான வாதங்களாலும் சுமந்திரனால் தமிழரது போராட்டத்தின் நியாத்தைக் குறித்து இராஜதந்திரிகளது பார்வையை மாற்ற முடிந்தது. ஆனால், இதற்கும் மேலாக முழுஉலகையும் மென்வலுவினூடாக தமிழர் பக்கம் இழுக்க வேண்டிய தேவையை சம்பந்தனும் சுமந்திரனும் உணர்ந்திருந்தனர். இதனால் சுமந்திரன் தனது சட்ட நிபுணத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு மோசடிகள், சட்ட ஆட்சிக்கும், நீதிச்சுதந்திரத்திற்கும் பங்கம் விளைவிக்கும் நடவடிக்கைகள் என்பவற்றுக் கெதிராக வழக்காடி சில முக்கியமான வெற்றிகளையும் ஈட்டினார். முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகபாரளுமன்றத்தில் குரல் கொடுத்தார். தமிழ்த்தரப்பு அடங்கலாக, சகலதரப்பினராலும் புரியப்பட்ட மனிதஉரிமை மீறல்களை கடிந்துகொண்டார். இப்படிச் செயற்பட்டதன் பயனாக, மனிதஉரிமை அமைப்புக்கள், வெளிநாட்டு அரசாங்கங்கள், ஐக்கியநாடுகள் அமையங்கள் எனப் பலதரப்பட்ட சர்வதேசசக்திகளின் ஆதரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிட்டியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தச் செயற்றிட்டத்தின் பயனே 2012 இல்மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்க அனுசரனையுடன் நிறைவேற்றப்பட்ட இலங்கை அரசைக் கேள்வி கேட்கும் தீர்மானமாகும். இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்படுவதற்கு சிலமாதங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா சென்று அதிஉயர் மட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் எதிர்க்கட்சி ஒன்று உத்தியோகபூர்வமாக அமெரிக்காவிற்கு விஜய மொன்றிற்கென அழைக்கப்பட்டமை இதுவே முதற்தடவையாகும்.

2012 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் படிப்படியாக 2014இல் சர்வதேச

**சம்பந்தனது தலைமைத்துவமும், அவர் மீது மக்களுக்கு இருக்கும் உயரிய மரியாதையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை ஒற்றுமையான, பலம்கொண்ட அரசியற்கட்சியாக மாற்றியது. இதில் தமிழ்மக்களது நல்வாழ்வையேதனது மூச்சாகவும், தனது உயிரைக்கூட தமிழரது அரசியற் போராட்டத்திற்கு அர்ப்பணிக்கத்துணிந்த மாவை சேனாதிராஜாவின் பங்களிப்பும் அளப்பரியது.**

தொடர்ச்சி 13-ம் பக்கம்



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# தையல் இயந்திரக் கலாசாரம்

இது ஐரோப்பியர் அதிகளவில் இலங்கை வரும் காலம். யுத்த நெருக்குவாரங்கள், ஆட்சியாளர் நெருக்குவாரங்கள் குறைந்த காலப்பகுதி. அதனால் பெருமளவானவர்கள் எந்த தயக்கமுமில்லாமல் சொந்த ஊர்களிற்கு ரிக்கற் போடுகிறார்கள். குடும்பமாக ஊரிற்கு வந்து போகிறார்கள்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் பெருமளவானவர்கள் ஊரிற்கு வரும்போது செய்துவிட வேண்டுமென கட்டாயமாக தீர்மானித்துள்ள விடயங்கள் சில உள்ளன. சொந்தவீட்டில் நின்று புகைப்படம் பிடித்து பேஸ்புக்கில் போடுவது, இறந்துபோன அம்மாவின் நினைவுதினத்தில் அன்னதானம் கொடுப்பது, நல்லூர் கோவிலுக்கு செல்வது போன்றவற்றுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாராவது ஒரு குடும்பத்திற்கு உதவி செய்வது என்பவற்றை தவறாமல் செய்கிறார்கள்.

இதில் முன்னவற்றை நாம் பேசப்போவதில்லை. அவற்றை பேச எமக்கு உரித்துமில்லை. எனினும், பின்னதை பேசலாம். சமகாலத்தில் அவசியம் பேசப்பட வேண்டிய விடயங்களில் இதுவுமொன்று.

வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், உள்ளூரில் உள்ள பரோபகாரிகள் போன்றவர்கள் தம்மால் இயன்றவரை யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களிற்கு ஏதாவது உதவிகள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

யுத்தசமயத்தில் தாயகத்தில், யுத்தவலயத்தில் இல்லாதவர்கள் பெருமளவில் இப்படியான உதவிகளை செய்கிறார்கள். அது பெருமளவிற்கு அவர்களின் குற்றவுணர்வை போக்கிக் கொள்கிறது. அல்லது தாயகக்கடமையாக செய்கிறார்கள். எப்படியாயினும், இந்தவகை உதவி செய்பவர்களை நாம் பாராட்டித்தான் ஆக வேண்டும்.

எனினும், இதிலுள்ள பெரும்பலவீனமே உதவிகள் ஒழுங்கமைக்கப்பட்ட பொறிமுறையொன்றின் ஊடாக செய்யப்படாமைதான். ஒழுங்கமைக்கப்பட்ட பொறிமுறையினூடாக செய்ய அரசுகள் ஒத்துழைப்பு வழங்கவில்லையென்பது ஒருபுறமிருந்தாலும், தமிழ் அரசியல்தரப்புக்கள் எவையும் அந்த 'ரிஸ்'கை எடுக்கவில்லையென்பது கசப்பான யதார்த்தம். சில சிறியகட்சிகள்தான் அவற்றை ஓரளவு செய்துள்ளன.

உதவிகள் ஒழுங்கமைக்கப்படாததால் பிரதான இரண்டு விளைவுகள் நேர்ந்தன.



1. உதவிகள் சிதறி சிதறி வந்தன. இடையில் நின்றவர்கள் சுருட்டியது போக எஞ்சியவைதான் பயனாளிகளை சென்றடைந்தது.

2. பயனாளிகளின் தேவையை இனம்கண்டு உதவிகள் வழங்கப்படாமல், பரோபகாரிகள் கொடுத்ததை அவர்கள் பெற்றுக் கொண்டனர்.

இதில் முன்னதை பற்றி நாம் பேசவில்லை. அது பற்றிய நிறைய ஆதாரங்களும், செய்திகளும் ஏற்க்னவே ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

இரண்டாவது, பயனாளிகளிற்கு தேவையான உதவிகள் வழங்கப்படவில்லையென்பது வடக்கு, கிழக்கெங்கும் பரவலாக நேர்ந்த அவலம்.

யுத்த பாதிப்பிற்கு இலக்காகிய ஆண்களெனில் கோழிகள் வழங்கப்படுகிறது. பெண் தலைமைத்துவத்தைகொண்ட குடும்பமெனில் தையல் இயந்திரம் வழங்கப்படுகிறது. இதுதான் தமிழர்களால் வழங்கப்படும் அடிப்படையான உதவி.

இதிலும் துயரம் தருவது, தையல் இயந்திரம் வழங்குவதுதான். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்கள் ஒவ்வொன்றின் வீட்டிலும் குறைந்தது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தையல் இயந்திரங்கள் உள்ளன.

இப்பொழுது வடக்கில் பெருமளவில் இறக்குமதி ஆடைகளிற்கான சந்தை வாய்ப்புக்களே அதிகமுள்ளன. விதவிதமான டிசைன்களில் இறக்குமதியாகும் தைத்த ஆடைகள் அனைவரையும் கட்டிப்போட்டு வைத்துள்ளது. ஆடையுலகம் போட்டி மிகுந்ததாக மாறிவிட்டது. இன்றைய பாஷன் நாளை மாறிவிடுகிறது.

**தையல் இயந்திரங்களை வாங்கும் பெண்கள் அதனால் பயனடைவதில்லை. பெரும்பாலும் வீட்டிலுள்ளவர்களின் கிழிந்த ஆடைகளை பொருத்திக் கொள்வதற்கே இந்த தையல் இயந்திரங்கள் உதவுகின்றன.**

இந்த போட்டிமிகுந்த உலகத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்களே போட்டியிட முடியாமல் காணாமல் போய்விட்டனர்.

இந்த சூழலில் வீடுகளில் தைப்பவர்கள் பற்றி கற்பனையும் பண்ணிப்பார்க்க வேண்டியதில்லை. வீடுகளில் தைத்த ஆடைகளை யார் இப்பொழுது அணிகிறார்கள்? பெண்கள் சேலைகளிற்கான மேற்சட்டைகளை மட்டும் தைத்து கொள்கிறார்கள். அதற்கும் உள்ளூர் பெண்கள் விதவிதமான விளம்பரப்படுத்தல்களுடன் தையல்நிலையங்கள் நடத்துகிறார்கள். அதற்கும் கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டாயிற்று.

இதிலுள்ள கேள்வியென்னவென்றால், இந்த அதிநாகரிக ஓட்டத்தில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பெண்தலைமைத்துவத்தை கொண்ட எத்தனை குடும்பங்களால் இணைய முடிகிறது என்பதே.

ஏனெனில், அவர்களிடம் தையல் தொடர்பான முறைசார் பயிற்சிகள் இல்லை. ஆடையுலக தொழிற்தேர்ச்சியில்லை. சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள், பொருளாதாரம் இல்லை.

இப்படியான நிலையில், தையல் இயந்திரங்களை வாங்கும் பெண்கள் அதனால் பயனடைவதில்லை. பெரும்பாலும் வீட்டிலுள்ளவர்களின் கிழிந்த ஆடைகளை பொருத்திக் கொள்வதற்கே இந்த தையல் இயந்திரங்கள் உதவுகின்றன.

உதவிகளை செய்யும் ஒவ்வொருவருமே தனித்தனியானவர்கள். தான் உதவிவழங்கப் போகும் குடும்பத்தை பற்றிய விபரத்தை அறியாதவர். யாரோ அறிமுகப்படுத்திய குடும்பம் அது. இப்படி ஒவ்வொரு தனித்தனி மனிதர்களும் தம்மால் இயன்றதை செய்துவிட்டு செல்கிறார்கள்.

ஆனால் இதையே ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட பொறிமுறையின் கீழ் செயற்படுத்தினால் பெரும் பலனை பெற்றுக்கொள்ளலாம். வடக்கில் வீடுகளில் முடங்கிக்கிடக்கும் தையல் இயந்திரங்களின் பெறுமதியை கணக்கிட்டால், ஏதோ ஒரு துறைசார்ந்த சாதாரண தொழிற்சாலையொன்றை அமைத்திருக்கலாம். அது பெருமளவானவர்களிற்கு பலனுடையதாக இருந்திருக்கும்.

இப்பொழுதும் காலம் கடந்துவிடவில்லை. உதவி செய்பவர்களின் எண்ணிக்கைதான் குறைந்துள்ளதே தவிர, உதவி தேவையானவர்களின் எண்ணிக்கை மாறவில்லை. எனவே, ஒழுங்கமைக்கப்பட்ட பொறிமுறையொன்றை இனியாவது காலம்கடத்தாமல் நிறுவ உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்



# டூரிங் டாக்கீஸ்



## மனசுக்குள் ஒரு மழைச்சாரல் இசைவெளியீடு

யாழ்ப்பாண கலைஞர்களின் நடிப்பில் உருவான மனசுக்குள் ஒரு மழைச்சாரல் திரைப்படத்தின் இசைவெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்தது. யாழ்ப்பாணத்தில் உருவாகும் இந்த திரைப்படத்தில் மிதுனா, கவிதாயினி கதாநாயகிகளாக நடித்திருக்கிறார்கள்.

## உருகிய சிம்பு

சிம்பு என்று நடிகர் இருக்கிறாரா என்பதையே ரசிகர்கள் மறந்து விடுவார்கள் போலுள்ளது. கிட்டத்தட்ட மோகன் படம் வந்து எவ்வளவு நாளோ, அதற்கு அதற்கு கிட்ட இருக்கும் எதிர்முகாம்காரர்கள் பேசி, ரசிகர்களை கடுப்பேற்றி வரும் நிலையில், சிம்புவின் புதியபடம் 'வாலு' வரப்போகிறது என்ற அறிவிப்பு வந்துள்ளது. வரும் 14ம் திகதி ரிலீசாகிறது. இந்தநிலையில் சிம்பு தனது சென்ரிமென்ரான ருவிட்டொன்றை உருகவிட்டுள்ளார். 'என் படத்தை வெளியாக விடாமல் தடுத்து என்னை கீழே தள்ளிவிடப் பார்த்தார்கள். ஆனால் மக்கள் என்மீது கொண்ட அன்பை யாராலும் தடுக்க முடியாது. என்னை வீழ்த்த முயன்றவர்களிற்கு ஆண்டவன் விரைவில் பதில் கொடுப்பான்' என ருவிட்டியுள்ளார். இந்த படத்தில் சிம்புவிற்கு ஹன்சிகா ஜோடி போட்டுள்ளார்.



## மகள் வேண்டாம் மனைவியாகிறோம்!

ரஜினிகாந்த் நடிக்கும் புதிய படத்தில் நாயகியாக சர்ச்சை நாயகி ராதிகா ஆப்தே ஒப்பந்தமாகியது பழைய செய்தி. ரஜினி, ராதிகா படப்பிடிப்பிடிப்பு வரும் செப்ரெம்பர் 18ம் திகதி மலேசியாவில் தொடங்குகிறது. அட்டக்கத்தி ரஞ்சித் இயக்கும் இந்த படத்தில் ரஜினி வயதான தாதாவாம். அவருக்கு ஜோடி கட்டுகிறார் ராதிகா ஆப்தே. தாதா வேடமென்றால் தாடி வேண்டாமா?.. தாடி இருக்கிறதாம். இதற்காக வெள்ளைதாடி வளர்த்துவருகிறாராம் ரஜினி. புதிய கெட்டப்பில் பகிரங்கமாக திரிவதையும் இயன்றவரை தவிர்த்து வருகிறாராம். ரஜினிக்கு படத்தில் ஒரு மகளும் உண்டாம். முன்னணி நடிகையொருவரைத்தான் நடிக்க வைக்க விரும்புகிறார்கள். என்றாலும், ரஜினிக்கு மகளாக வேண்டாம், ஜோடியாக நடிக்க வையுங்கள் என நடிகைகள் அலப்பறை பண்ணி, ரஞ்சித்தை 'ரவுண்டு' கட்டுகிறார்களாம் நடிகைகள்.



## கல்யாணமெல்லாம் வேஸ்ட்... வேணும்னா சேர்ந்து வாழலாம்!

திருமணம் செய்துகொண்டு, சண்டைபோட்டு விவாகரத்து பெறுவதைக் காட்டிலும் லிவிங் டுகெதர் உறவில் வாழ்ந்து பிரிவது மேலானது என்கிறார் நடிகை த்ரிஷா. ஒரு தொழிலதிபருடன் த்ரிஷாவுக்கு திருமணம் நிச்சயமாகி, கடைசி நேரத்தில் திருமணம் ரத்தானது நினைவிருக்கலாம். இப்போது திருமணமே வேண்டாம் என்ற மனநிலைக்கு வந்துவிட்ட த்ரிஷா, திருமணம் செய்துகொள்ளாமல் சேர்ந்து வாழ்வது நல்லது என்று கூற ஆரம்பித்துள்ளார். இது தொடர்பாக அவர் சமீபத்தில் அளித்துள்ள ஒரு பேட்டியில், "லிவிங் டுகெதர் முறை உறவு ஒவ்வொருவரின் தனிப்பட்ட விருப்பம். சம்பந்தப்பட்ட இரண்டு பேருக்கும் அவர்களின் குடும்பத்துக்கும் இந்த உறவு சரி என்று தோன்றினால், பிறகு அதில் வேறு எந்தப் பிரச்னையும் இருக்கக் கூடாது. திருமணம் செய்து, கருத்து வேறுபாடுகளால் விவாகரத்து பெற கோர்ட் படிகளில் ஏறுவதைக் காட்டிலும், லிவிங் டுகெதர் உறவில் இருந்து பிரிவது மேலானது, சிக்கலில்லாதது என நினைக்கிறேன்," என்றார்.





## மாதுரிமாவுக்கு கைகொடுத்த டூ பீஸ்

தமிழில் ஆம்பள, சேர்ந்து போலாமா என்ற இரண்டு படங்களில் மட்டும் நடித்திருக்கிறார் மாதுரிமா. அதன்பின்னர் வாய்ப்புக்கள் இல்லாமல் வாடிக் கொண்டிருக்கிறார். தற்பொழுது தெலுங்கு, மலையாளம் என தலா ஒரு படத்தில் மட்டுமே நடித்துக் கொண்டிருக்கிறார். இழுத்துப் போர்த்துக் கொண்டு நடித்தால் வேலைக்காகாது என்பதை தெரிந்து கொண்டு, டூ பீஸ் நீச்சல் உடைகளில் கூட தனது கவர்ச்சி புகைப்படங்களை கூட இணையத்தளங்களில் வெளியிட்டு பார்த்தார். யாரும் கண்டுகொண்டதாக தெரியவில்லை. தமிழில் பிரபல ஸ்டார் யாருடனும் ஜோடி போடாததுதான் யாரும் அவரை கண்டுகொள்ளாததற்கு காரணம் என்று கோலிவுட் வட்டாரங்களில் பேச்சு உள்ளது. கைநிறைய கால்ஷீட்டுடன் புதிய படத்திற்காக காத்திருந்தார். கன்னட இயக்குனர் நந்தா கிஷோர் பார்வை தற்போது மாதுரிமா மீது விழுந்துள்ளது. புதிய படத்திற்கு மாதுரிமாவை அணுக ஓ.கே சொல்லிவிட்டார்.



## அசினின் மாப்பிள்ளை ரெடி!

தமிழில் விஜய், அஜித், சூர்யா, விக்ரம் என முன்னணி நடிகர்களுடன் நடித்து ரசிகர்களை கவர்ந்தவர் அசின். இதன் பின் பாலிவுட்டிலும் ஒரு ரவுண்ட் வரவேண்டும் என்று அமீர் கானுக்கு ஜோடியாக கஜினி படத்தில் நடித்தார். படம் ஹிட் ஆனாலும் அவருக்கு பெரிய பெயர் ஒன்றும் கிடைக்கவில்லை, இந்நிலையில் இவர் பிரபல தொழிலதிபர் ராகுல் ஷர்மா என்பவரை திருமணம் செய்து கொள்ளவிருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றது. இவர் நடிப்பில் விரைவில் ஆல் இஸ் வெல் படம் திரைக்கு வரவிருக்கின்றது. இப்படத்தில் அபிஷேக் பச்சனுக்கு ஜோடியாக இவர் நடித்துள்ளார். இப்படத்தில் குடும்பத்தலைவி கேரக்டரில் நடித்துருக்கும் அசின் விரைவில் நிஜ வாழ்க்கையிலும் குடும்பத்தலைவி ஆக இருக்கிறார்

## நம் ஊர் பெண்ணுக்கு பாதைகாட்டுங்கப்பா

நடிகர் அர்ஜூன் நடிக்கும் புதியபடம் 'ராணி ராணாம்மா'. தமிழ், தெலுங்கு என இருமொழிகளிலும் தயாராகிவருகிறது. படத்தில் பெரும்பகுதி படப்பிடிப்புக்கள் நிறைவடைந்து விட்டன. படத்தில் அர்ஜூனின் ஜோடி ராய் லட்சுமி. இதில் விசேடம் என்னவென்றால், இலங்கைப் பெண்ணாக ராய் லட்சுமி நடிக்கிறார். ஐதராபாத்தில் வாழும் தமிழராக அர்ஜூன் நடிக்கிறார். இலங்கைப்பெண்ணான ராய் லட்சுமியை, இலங்கையிலுள்ள அவரது சொந்த ஊருக்கு அர்ஜூன் பத்திரமாக கொண்டுபோய் விடுவதுதானாம் கதைக்கரு. சமீபத்தில் சல்மான்கான் நடிப்பில் வெளிவந்த 'பஜ்ரங்கி பாய்ஜான்' படமும் இதேபோன்ற கதைக்கருவுடன் வெளியான படம்தான். அது ரசிகர்களிடம் பெற்ற வரவேற்பை பார்த்துவிட்டுத்தான், இந்த படம் தொடங்கப்பட்டதாம். ஏதோ, நம்மூர் பெண்ணை பாதை மாறாமல் கொண்டு வந்து சேர்த்திடுங்கப்பா அர்ஜூன்!

## டாப்ஸிக்கு டோஸ் விட்ட செல்வராகவன்

செல்வராகவன் இயக்கும் 'கான்' படத்தில் சிம்பு, டாப்ஸி, கேத்ரின் தெரசா, ஜெகபதி பாபு நடிக்கின்றனர். இது உளவுப்பிரிவு கதையாம். இதில் டாப்ஸி உளவுப்பிரிவு அதிகாரியாக நடிக்கிறாராம். இப்படியான வேடத்தில் இதுவரை நடித்ததில்லையென காண்பவர்கள் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு திரிகிறராம்.. இந்த கதை சுற்றிச் சுழன்று செல்வராகவன் காதிற்கு போய்ச் சேர, அவர் போன் செய்து டாப்ஸிக்கு டோஸ் விட்டுள்ளார். இப்பொழுது யாராவது படத்தைப்பற்றி கேட்டால் டாப்ஸி தலைதெறிக்க ஓடிவிடுகிறாராம்.








## அஜித்தையும் மயக்கிய அனிருத்

அனிருத்தின் இசை அஜித்துக்கும் படித்துப் போய்விட்டதாம். சிவா இயக்கத்தில் தற்பொழுது அஜித் நடித்துவரும் தல 56 படத்தில் அனித் காட்டிய வித்தைகளை பார்த்துத்தான் அஜித் மயங்கிவிட்டாராம். ஸ்ருதிஹாசன், லட்சமிமேனன், அஸ்வின் நடித்துவரும் இந்தப்படத்தின் படப்பிடிப்புகள் தற்போது விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இந்தபடத்திற்கு அனிருத்தான் இசையமைக்கிறார். அனிருத்தின் இசைக்கு அஜித்தும் அடிமையாகிவிட்டாராம். அவரது இசைமட்டுமல்லாமல், அவர் பணியாற்றும் முறையும் அஜித்துக்கும் பிடித்துள்ளதாம்.

## பொலிற்றிக்கல் கொசிப்

அண்மையில் பிரேமதாசா மைதானத்தில் நடந்த கலவரம் எல்லோருக்கும் நினைவில் இருக்கும். பாகிஸ்தான் அணியுடனான போட்டியில் சில ரசிகர்கள் ரகளை செய்திருந்தனர்.


அந்த சம்பவத்தில் 6 குழப்படிக்காரர்களை பொலிசார் வளைத்துப்பிடித் திருந்தனர். அந்த வளைப்பில் போனசாக பொலிசாருக்கு கிடைத்தவர்கள் 11 போதையாளர்கள். இவர்கள் போதைப்பொருளை உறிஞ்சிக்கொண்டே போட்டியை பார்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

இவர்களை பொலிஸ்நிலையத்திற்கு கொண்டு செல்லும் வழியிலேயே பொலிசாரின் தொலைபேசிகள் சிணுங்கத் தொடங்கிவிட்டதாம். ‘கனமான‘ அரசியல்வாதி யொருவர் தலையிட்டு அதில் ஒருவரை விடுவிக்க வலியுறுத்தியுள்ளார்.

நல்லாட்சியாயிற்றே? சளைக்காத பொலிஸ்காரர் அவர்களிடம் முதல் விசாரணை அறிக்கையை தயார் செய் ஆயத்தமாகியபோது, அழுத்தமும் அதிகரித்துக் கொண்டு சென்றுள்ளது.

இந்த நாடகத்தின் திடீர் திருப்பமான நள்ளிரவில் முன்னாள் கிரிக்கெட் சங்கத் தலைவர் நேரடியாக பொலிஸ்நிலையம் வந்து மகனை சிறைமீட்டு சென்றாராம். ஊருக்கு ஒரு நீதியா? எஞ்சிய 10 பேரையும் பொலிசார் வீட்டுக்கு அனுப்பிவிட்டனராம்!

யாழ்ப்பாணத்தில் பட்டிமன்ற பேச்சாளர்களின் மனைவிமார் புறுபுறுக்க ஆரம்பித்துள்ளனராம். கணவனமாரை கண்ணால் கண்டே பலவாரங்களாம். இருக்கிறாரா.. எங்காவது ஓடிவிட்டாரா என்பதே தெரியாமல் திண்டாடுகிறார்களாம். என்ன விடயமென்று விசாரித்தால்... அரசியல் கட்சிகள் அவர்களை வளைத்துப்பிடித்து வைத்துள்ளனவாம். சில கட்சிகள் நாளொன்றிற்கு ஐயாயிரம் ரூபா வரை கொடுக்கிறார்களாம். இதனால் பேச்சாளர்கள் அரசியல்மேடைகளே கதியென்று கிடக்கிறார் களாம். தேர்தலில் வெற்றிபெற்றால் வேலை வாய்ப்பு தருவதாக நல்ல பேச்சாளர்களிற்கு சில வேட்பாளர்கள் வாக்குறுதி யளித்துள்ளனராம்.



# முன்னாள் போராளிகள் அரங்கிற்கு வர வேண்டுமா?

தமிழ் சமூகத்தில் இன்று ஆயுதப் போராளிகளின் நிலையென்ன என்பது சங்கடமான கேள்வியொன்று. அவர்கள் சமூகத்தில் உரிய அங்கீகாரத்தை பெற்றுள்ளார்களா? விடுதலைக்காக போரடியவர்களிற்கான கௌரவத்தை சமூகம் வழங்கியுள்ளதா?. இந்த கேள்வி பெரும்பாலானவர்களை அசௌகரியப்பட வைக்கும். ஏனெனில், அவர்களின் உழைப்பிற்கான அங்கீகாரத்தை சமூகம் வழங்கவில்லையென்பது நமக்கு தெரியும். சமூகத்தின் ஓரங்கமான நாமும் இணைந்துதான் இந்த புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்ட பின்னர் அந்த அமைப்பிலிருந்த போராளிகளிற்கு ஏற்பட்ட சமூக அவலம் இன்னும் தீர்ந்தபாடில்லை. வல்லவர்களாகவும், நல்லவர்களாகவும் அவர்களை சமூகம் தலையில் தூக்கி வைத்து கொண்டாடிய காலம் 2009 மே 18ம் திகதியுடன் முடிந்துவிட்டது. இப்பொழுது அவர்களை முதலாளிகள் குறைந்த சம்பளத்தில் வேலைவாங்கும் அடிமைத் தொழிலாளிகளாகவே பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

அல்லது வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், உள்ளூர்பணக்காரர்கள் கோழிக்குஞ்சோ, மாட்டுக்கன்றோ கொடுத்தோ படம் எடுத்து பேஸ்புக்கில் போட பயன்படுத்துகிறார்கள்.

வெற்றிபெற்றுக் கொண்டிருப்பவர்களிற்குத்தான் இந்த சமூகத்தில் அங்கீகாரம் கிடைக்கிறதென்பதே கசப்பான யதார்த்தம். பந்தயத்தில் கலந்து கொண்டு வெற்றியீட்ட முடியாதவர்களை நம்மவர்கள் அவ்வளவாக கண்டுகொள்வதில்லை.

தமிழீழ விடுதலையென்ற இலட்சியத்துடன் வீடுகளைவிட்டு புறப்பட்ட எண்ணற்ற இளைஞர்கள் ஏராளம் இயக்கங்களை 1980களில் தொடங்கினார்கள். அன்றிலிருந்து 2009 வரையான காலப்பகுதியில் எத்தனை இளைஞர்கள் வீடுகளை விட்டு புறப்பட்டிருப்பார்கள். அவர்களின் எத்தனைபேர் உங்கள் நினைவில்உள்ளனர்?இயக்கத்திலிருந்தசமயத்தில் சோறுபோட்ட எத்தனைபேரை இயக்கத்தை விட்டபின்னும் உபசரித்திருக்கிறீர்கள்?

பெரும்பான்மை தமிழ்சமூகம் எனப்படுவது எதிலும் பட்டுக்கொள்ளாமல் நழுவிச் செல்லும் இயல்புடையது. எண்ணற்ற இளைஞர்கள் வீடுகளை விட்டு காடுகளிற்கு சென்று கொண்டிருக்க, அதேகாலப்பகுதியில் இன்னும் பன்மடங்கானவர்கள் வீடுகளை விட்டு வேறுநாடுகளிற்கு சென்றார்கள். இன்னும் பெருந்தொகையானவர்கள் பாதுகாப்பான வாழ்வையமைத்துக் கொண்டார்கள். அன்றாட வாழ்வு, வேலை, பணம், குடும்பம் என்பவற்றிற்கிடையில் விடுதலைபற்றியும் அவர்கள் பேசிக் கொண்டனர். போராளிகளை பற்றியும் பேசிக் கொண்டனர். மிக துல்லியமாக சொன்னால், தமிழர்கள் காதலித்து, ககல்யாணம் செய்து, வேலைபார்த்து, பிள்ளை வளர்த்துக் கொண்டு தமிழீழம் பெற விரும்பினார்கள். ஓய்வுநேரத்தில் சீட்டாட்டம்தான் ஆடலாம். புரட்சி செய்ய முடியாது.

நல்லவாழ்வையமைத்துக் கொள்ள பாடுபட்ட பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்காக சிறு தொகையான இளைஞர்கள் முயன்று கொண்டிருந்தார்கள். அவர்கள் உயிரைக் கொடுத்து ஈட்டிய வெற்றிகள் சனங்களை உவகைகொள்ள வைத்தது. ஒவ்வொரு வெற்றியும் வெடிகொளுத்தி கொண்டாடப்பட்டது. பிள்ளைகளையிழந்த பெற்றோரின் கதறல் வெடியோசைகளிற்குள் அடங்கிச் சென்றது.

**முன்னாள் ஆயுதப்போராளிகள் இந்த சமூகத் திற்காக தம்மை அர்ப்பணிக்க துணிந்தவர்கள். திசைமாறிச் சென்ற ரவைகளால் மட்டுமே இன்று அரசியல்போராளிகளாக மாறியுள்ளனர்.**

சிறுதொகுதி போராளிகளும் பெருந்தொகை பார்வையாளர்களுமான தமிழ்சமூகம் என விசித்திரமான கலவை நம்மிடமிருந்தது. தமிழர்களின் அரசியல் இலட்சியங்களை வெற்றிபெற்றுக் கொள்ள முடியாததற்கான பிரதான பலவீனங்களில் இதுவுமொன்று என்பதை நாம் பேசிக் கொள்வதில்லை. ஏனெனில், அந்தக்கேள்விக்கு முதலில் பதிலளிக்க வேண்டியது நாமல்லவா. நமக்கு சங்கடம் தரும் கேள்விகளை மௌனமாகவே கடந்து சென்று கொண்டிருக்கிறோம். அல்லது, தப்பித்து கொள்ளும் விதமான கற்பிதங்களை உருவாக்கி வைத்திருக்கிறோம்.

தற்பொழுது மிகப்பிரபலமான ஒரு கற்பிதம் தமிழர்கள் மத்தியில் உள்ளது. ‘மரணித்தவர்கள்தான் உண்மையான போராளிகள்’ என பலரும் சொல்கிறார்கள். உண்மையில் இதைப்போன்ற அபத்தம் வேறொன்றுமில்லை.

சில வகையினர் தவிர வேறெவரும் திகதி குறித்து இறப்பதில்லை. இறந்தவர்களினதும், உயிர்தப்பித்தவர்களினதும் தலைவிதியை தீர்மானித்தது எதிர்தரப்பிலிருந்து வந்த ரவையின் திசையே தவிர வெறெல்ல. ஆட்பலம் குறைந்த எல்லா இயங்கங்களுமே வலியுறுத்தி கூறிய விடயம் ‘எவ்வளவிற்கெவ்வளவு உயிர்தப்பும் சாத்தியங்களை உருவாக்குகிறீர்களோ அவ்வளவிற்கவ்வளவு போராட்டத்தின் வெற்றி உறுதி செய்யப்படும்’ என்பதே. எல்லா போரியல் விதிகளையும் விட தலையாய போர்விதி இதுதான்.

எனினும், தமது பொறுப்புக்களிலிருந்தும், கடமைகளிலிருந்தும் தப்பித்து கொள்ள இப்படி பலபல கற்பிதங்களை தமிழர்கள் உருவாக்கி வைத்துள்ளனர்.

வெளிப்படையாக பேசினால், ஆயுதம் தூக்கி போராடியவர்கள் மரணித்துவிட வேண்டுமென்பதே பொதுசன அபிப்பிராயமாக உள்ளது. அல்லது எங்காவது தலைமறைவாகிவிட வேண்டும். அவர்கள் போராடிக் கொண்டிருந்த வரை பிரச்சனையில்லை. அதன்பின்னர் பொதுவெளிக்கு வந்து, போதாமைகளை சுட்டிக்காட்டுவதை, மனச்சாட்டிகளை உறுத்தச் செய்வதை தமிழர்கள் விரும்பவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் என்றல்ல, போராட்டத்தில் ஈடுபட்ட எல்லா இயக்கங்களும் இந்தவகை புறக்கணிப்பிற்கு உள்ளாகின. இதற்கு இயக்கங்கள் தமக்குள் முரண்பட்டு கொண்டது தமிழர்களிற்கு மேலும் வசதியாகிவிட்டது. மூன்று தசாப்தங்களின் முன்னர் இயக்கங்கள் தமக்குள் மோதிக் கொண்டதை நினைவுபடுத்தி, தற்போது அவை ஒன்றுபட்டு இயங்குவதை பார்க்க மறுக்கிறார்கள்.

தமிழ் அரசியலில் தற்போது செயற்படாதவர்களின் காலம் மேலோங்கியுள்ளது. அதாவது, செயற்படாத தமிழர்களை செயற்படாத தலைவர்கள் வழிநடத்துகிறார்கள். இரண்டு தரப்பிற்குமிடையில் ஒருமித்த எண்ணப் பரிமாற்றம் நிகழ்கிறது.

முன்னாள் ஆயுதப்போராளிகள் இந்த சமூகத்திற்காக தம்மை அர்ப்பணிக்க துணிந்தவர்கள். திசைமாறிச் சென்ற ரவைகளால் மட்டுமே இன்று அரசியல்போராளிகளாக மாறியுள்ளனர். தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் கூட புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற கட்சிகள் உள்ளன. நீண்டபோராட்ட வரலாற்றையுடைய அந்தகட்சிகளிற்கும் தமிழ்சமூகம் அவர்களிற்குரிய இடத்தை வழங்க வேண்டும்.

நீண்டதும், மதிப்புமிக்கதுமான போராட்ட வரலாற்றையுடையவர்கள் அவர்கள். கௌரவமான பாத்திரத்தை வகித்துமுள்ளனர்.

தமிழர்கள் சார்பில் சமரசமற்ற முடிவுகளை எடுக்கவல்லவர்கள் என இன்றைய காலகட்டத்தில் உத்தரவாதப்படுத்தக்கூடியவர்கள் அவர்கள்தான். தமிழ்தேசிய அரசியலில் தீர்மானம்மிக்கவர்களாக அவர்களையும் மாற்றுவது தமிழர்களிற்கு மிக பயனுடையதாக அமையும்.



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# எமது பிரதிநிதிகள் இப்படித்தான் இருக்க வேண்டும்


## மக்கள் கருத்து

பொதுத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் மக்கள் யாருக்கு வாக்களிப்பதென்ற முடிவிற்கு வந்திருப்பார்கள். தமது பிரதிநிதிகள் எப்படியானவர்களாக இருக்க வேண்டுமென்ற முடிவிற்கும் வந்திருப்பார்கள்.

மக்கள் எப்படியான வேட்பாளர்களை எதிர்பார்க்கிறார்கள் என்பதை அரசியல்வாதிகளும் அறிந்து கொள்ள வேண்டாமா? தீபம் செய்தியாளர்கள் களமிறங்கி மக்களின் மனங்களை நாடிபிடித்தார்கள்.

தமது பிரதிநிதிகள் எப்படியிருக்க வேண்டுமென்பதை மக்களே சொன்னார்கள். அவற்றில் சிலவற்றை இங்கு தருகிறோம்.

**சி.எம்.ஜோசப்**
**(சமாதான நீதிவான்) சில்லாலை**



'இன ஐக்கியம் இன ஐக்கியம் என்று பேசிக்கொண்டு தமக்குள் ஒற்றுமையில்லாத அரசியல்வாதிகளையே நாம் காண்கிறோம்.

இன ஐக்கியம் ஏற்படவேண்டுமானால் முதலில் அரசியல் தலைவர்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படவேண்டும்.

முன்பு மக்கள் ஆணை பெற்று அதிகாரத்தில் இருந்தவர்கள் தமது நலனுக்காக தமக்குள்ளே முரண்பட்டுக்கொண்டதை நாம் அறிவோம். வாகனம் தேவை என்று சைக்கிள் ஓடியவர்களும், பதவி தேவை என்று உண்ணாவிரதம் இருந்தவர்களும் என்று தன்னலனுக்காகச் செயற்பட்ட மக்கள் பிரதிநிதிகளை நாம் கண்டுள்ளோம்.

தேர்தல் காலம் வந்துவிட்டால் மட்டுமேஒருதாய்பிள்ளைகள்போல ஒற்றுமையாக வாக்கு கேட்கவரும் இவர்கள் அதிகாரத்துக்கு வந்தபின்னரும் அப்படி ஒற்றுமையாக இருந்து தமிழருக்கான தீர்வை எட்டித்தரவேண்டும் என்பதே எனது விருப்பம்.

அதுமட்டுமன்றி எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய இவர்கள் முன்னின்று செயலாற்ற வேண்டும். இவ்வாறான தலைவர்களையே நான் எதிர்பார்க்கிறேன். எனது தெரிவும் அவ்வாறானதாகவே இருக்கும்' என்றார்.

**கி.ஆனந்தகுமார்**
**(வர்த்தகர்) பண்டத்தரிப்பு**



'எங்கள் தொகுதியில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பே பலமாக உள்ளது.எங்கள் ஆதரவுகூட்டமைப்புக்கே.

எத்தினபேர் புதுசு புதுசாக் தேர்தல்ல போட்டியிட்டாலும் நாங்கள் கூட்டமைப்பைத்தான் ஆதரிக்கிறம். அந்த முடிவில மாற்றம் இல்ல.

எங்கள் மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கிற பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவேண்டும் என்பதுதான் எமது கோரிக்கை. அதற்காக ஒற்றுமையாக செயற்பட்டு நிலையான தீர்வை பெறவேணும்.

கூட்டமைப்புக்குள்ளும் தற்போது ஒற்றுமையில்லை என்ற கருத்து நிலவுகிறது. இதுகுறித்து அந்த தலைவர்கள் ஆராயவேண்டும். ஒற்றுமையை குலைக்காது பொறுப்புடன் செயற்பட்டு நீண்டகாலமா இழுபறிப்படும் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண முன்வர வேண்டும் என்பதே எனது கோரிக்கை.

ஏனைய கட்சிகளைப்போல் சலுகைகளுக்காகக் கூட்டமைப்பு


> **சர்வதேச மட்டத்தில் எமது பிரச்சினையை முன்னிறுத்தி தீர்வுகாணும் வகையில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் தேகுதியுடையர்களையே நாம் தெரிவு செய்யவேண்டும்.**

செயற்படக்கூடாது. மக்களுக்கு சேவையாற்றுவதை மனதில் கொண்டு ஒருங்கிணைந்து செயற்படவேண்டும்.இதற்காகமக்களாகிய எங்களின் பலம் அவர்களுக்கு இருக்கும்' என்றார்.

**ஜெயசேகரம்**
**யாழ்ப்பாணம் வர்த்தகர் சங்கத் தலைவர்**

'தமிழர்களாகிய நாங்கள் ஆயுத பலத்தை இழந்து தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களால் ஒடுக்கப்பட்டவர்களாகப் பார்க்கப்படும் நிலையிலேயே உள்ளோம்.

எனவே எதிர்வரும் தேர்தலில்



எங்கள் வாக்குப்பலத்தை பயன்படுத்தி தவறான கற்பனைகளுக்கு பதிலளிக்கவேண்டும்.

எமது உரிமைகளைப் பறித்துவிட்டதாகக் கருதும் தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கு நாம் எமது பலத்தை நீரூபித்துக் காட்ட வேண்டும்.

எனவேநடைபெறவுள்ளபொதுத் தேர்தலில் எமது ஒற்றுமையையும் வாக்குப்பலத்தையும்வெளிப்படுத்தி அதன் ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் அழுத்தம் கொடுக்கும் சக்தியாக நாம் மாறவேண்டும்.

சர்வதேச மட்டத்தில் எமது பிரச்சினையை முன்னிறுத்தி தீர்வுகாணும்வகையில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் தேகுதியுடையர்களையே நாம் தெரிவு செய்யவேண்டும்.


குறிப்பாக தென்னிலங்கை சக்திகளுக்கு துணைபோகாத, விலைபோகாத அரசியல் வாதிகளையே நாம் தெரிவுசெய்யவேண்டும்' என்றார்.

**லியோ ஆம்ஸ்ரோங் மதகுரு**

'பொதுத் தேர்தலில் வாக்களிப்பன்மூலம் தமிழ்மக்கள் அரசியல் ரீதியில் விழிப்புடையவர்கள் என்ற செய்தி நிலைநிறுத்தப்படவேண்டும்.

பாரம்பரிய கட்சி, சலுகைதரும் கட்சி, வேலைவாய்ப்பு தரும் கட்சி என்று தேடிக்கொள்ளாமல் மக்களின் தேவை அறிந்து சேவை செய்பவர்களும், அரசியல் தீர்வை பெற்றுத் தரக் கூடியவர்களையும், சர்வதேச மட்டத்தில் இராஜதந்திரரீதியில் பேசக்கூடியவர்களையுமே தெரிவுசெய்ய வேண்டும்.

தெற்கிலும், வடக்கு கிழக்கிலும் அரசியல் நிலைமை பெரும் போராட்டக் களமாகவே காணப்படுகிறது. எனவே மக்கள் அவதானமாகச் செயற்படவேண்டி



யுள்ளது.

வடக்கைப்பொறுத்தவரை இதுமுக்கியமான தேர்தலாகும். 2009 க்கு பின்னர் நாம் தோற்றுப் போனவர்கள் என்ற நிலைமை மாறி எம்மாலும் சாதிக்கமுயும் என்ற உண்மையை நிலைநாட்ட இந்த தேர்தல்வாய்ப்பாக அமைந்துள்ளது.

மக்கள் போராளிகளாகச் செயற்படக்கூடியவர்களையும், தமிழரின் அடையாளங்களை பேணிப் பாதுகாப்பவர்களையும், விலைபோகாதவர்களையும்தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்பவேண்டும்.

அவ்வாறு மக்களால் தெரிவு செய்யப்படுபவர்கள் தங்கள் நோக்கத்தில் நின்று வழுவாது செயற்படவேண்டும்' என்றார்.

---


1-ம் பக்கம் தொடர்ச்சி

வடக்குகிழக்கில் முஸ்லீம்களின் அரசியல் ரீதியிலான பாதுகாப்பை அரசியலமைப்பு ஏற்பாடுகளின் மூலம் உறுதி செய்துகொண்டு தீர்க்கலாம்.

இதற்காக முன்னரும் பல எற்பாடுகள் ஆராயப்பட்டன.தென்கிழக்குநிர்வாக அலகு போன்றவை ஆராய்ப்பட்டுள்ளன. அப்படியான பொருத்தமான ஏற்பாடுகளை கண்டறியவேண்டும். அதற்கு நாமும் கடுமையாக உழைக்க வேண்டும். அதற்கு முக்கியமாக முஸ்லீம்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சந்தேகங்கள், பயங்களை அகற்ற வேண்டும். இது பெரிய பணி.

3. **தமிழ்தேசிய கூட்டமைப்பினர் இன்னொரு பிரதான தேர்தல் வாக்குறுதி வழங்குகிறார்கள். 2016இல் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்போம் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறிவருகிறார். இதுநடைமுறை சாத்தியமா? 50வருடங்களிற்கு மேலாக போராடிவரும் இனமொன்று, தீர்விற்கான எந்த முகாந்திரமுமில்லாமல் எப்படி இந்த வாக்குறுதியை நம்பலாம்? தீர்வு தொடர்பில் அரசதரப்பிலிருந்து எதேனும் வாக்குறுதிகள் உங்களிற்கு தரப்பட்டுள்ளதா?**

இல்லை. இப்பொழுது அரசேயில்லையே. தேர்தலின் பின்னர்தான் புதிய அரசு வரும். தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு அப்படி யாரும்



இரகசிய வாக்குறுதிகள் வழங்கவில்லை. 2016 இல் தீர்வு என சம்பந்தன் ஐயா சொல்லியிருந்தால், அவர் சர்வதேச நகர்வுகளின் அடிப்படையில்த்தான் சொல்லியிருப்பார் என நினைக்கிறேன். ஏனெனில் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டுமென்பதில் சர்வதேசசமூகம் உறுதியாக உள்ளது. என்றாலும், சம்பந்தன் ஐயா சொன்ன விடயத்தை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

4. **வடக்கு முதல்வர் தமிழ்தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைகளில் இருந்து ஒதுங்கியுள்ளார். அதுமட்டுமல்ல, அவர் கூட்டமைப்பின் போதாமைகள் பற்றி பகிரங்கமாக கூறும் வீடியோ ஒன்றும் வெளியாகியுள்ளது. அண்மையில் கூட தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை பகிரங்கமாக விமர்சித்திருந்தார். உண்மையில் கூட்டமைப்பிற்குள் என்ன நடக்கிறது? தமிழ்தேசிய கூட்டமைப்பின் அரசியல் செல்நெறி மீதான அவரது விமர்சனமாக இதனை கொள்ளலாமா?**

உண்மையில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் அதிகபட்ச ஜனநாயகம் நிலவுகின்றதென்றுதான் சொல்லத் தோன்றுகிறது. அதனால்த்தான் வெளிப்படையாக, தயக்கமில்லாமல் பலரும் விமர்சனங்களை வைத்து வருகிறார்கள். கட்சிக்குள் உள்ளக விமர்சனங்கள் இருப்பது கட்சியை அதிகளவில் பலப்படுத்தும். என்றாலும், அது பகிரங்கமாகும் பொழுது கட்சியை பலவீனப்படுத்தும்.

வடக்கு முதல்வர் சொன்ன விடயங்கள் அனைத்தையும் நான் பார்க்க கிடைக்கவில்லை. எந்த கட்சிக்கும் ஆதரவளிக்க மாட்டேன் என்ற அறிக்கையை மட்டும் பார்க்க கிடைத்தது. அதில் தமிழ்தேசியக் கூட்டமைப்பிற்கு பாதகமாக எதுவுமில்லையே.கூட்டமைப்பின் அங்கத்துவகட்சிகள் அனைத்தையும் சமமாகபார்ப்பதால் ஒன்றை ஆதரித்து மற்றதை விட்டு பிரசாரம் செய்யவிரும்ப வில்லையென்று தானே கூறியிருக்கிறார்.

5. **இன்றைய தமிழ்தேசிய அரசியலில் உள்ள எளிமையான, முன்னுதாரணமான தலைவராக நீங்கள் உள்ளீர்கள். வவுனியா நூலகம் அமைத்து கொடுத்தது, கோப்பாய் கல்வியியல் கல்லூரி அமைக்க உங்கள் சொந்தநிலத்தை கொடுத்தமை, கல்விச் செயற்பாடுகளிற்கு தொடர்ந்து உதவிக் கொண்டிருக்கிறமை என உங்கள் நடவடிக்கைகளை ஏன் இரகசியமாகவே வைத்திருக்கிறீர்கள்? உங்களின் இந்த அரசியல்பாணி, இன்றைய விளம்பர அரசியலில் எடுபடுமா?**

நீங்கள் கேட்பது ஒருவகையில் சரிதான். என்றாலும் நான் என்னைப்பற்றி விளம்பரப் படுத்திக் கொள்ள விரும்புவதில்லை. மக்களிற்கு சேவை செய்வது மட்டுமே அரசியல்வாதிகளின் கடமையென்று நம்புகிறேன். என்றாலும், யதார்த்தம் நீங்கள் சொன்னதைப் போல்த்தான் உள்ளதென்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

இருந்தாலும், எப்படியோ இந்த விடயங்களையெல்லாம் அறிந்து கொண்டுவிடுவார்கள். அவர்கள் விழிப்பாக உள்ளனர்.

இப்போது எங்களது கட்சி ஆதரவாளர்களும் இப்படியொரு கோரிக்கையை வலுவாக முன்வைக்க தொடங்கியுள்ளனர்.



# இதனால்த்தான் புகைக்கிறோம்

## யாழ்ப்பாண ஆண்களின் ஒப்புதல் வாக்குமூலம்!

சியா

இப்பொழுதெல்லாம் சிகரெட் புகைக்காத ஆண்களை காண்பதே அதிசயமாகிவிட்டது. மேக்கப் போடாத ஒரு பெண்ணை கண்டாலும், சிகரெட் பற்றாத ஒருவனை காண முடியாதென்பதே பெரும் துயரமான உண்மை. அப்படி மாறிவிட்டது நமது சமூகம்.

புகைக்காதீங்கப்பா, புகைக்காதீங்கப்பா என எல்லோரும் கத்திக்கத்தி சொல்கிறார்கள். ஆனால், புகைத்தலிற்கெதிரான ஊர்வலம் போகின்றவனும், சின்ன 'கப்பில்' கடைக்குப்பின்னால் ஓடிச் சென்று ஒரு 'தம்' அடித்துவிட்டு வரும் நிலைதான் உள்ளது.

புகைப்பதால் உங்களிற்கு மட்டுமல்ல, உங்களை சுற்றியுள்ளவர்களிற்கும் கேடு என தொடர்ந்து எல்லோரும் சொல்லிவருகிறார்கள். ஊடகங்களில் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. என்றாலும் சிகரெட் விற்பனை அதிகரித்துக் கொண்டுதான் செல்கிறது. யார் கேட்கிறார்கள்? ஊடகங்ளும் எத்தனை நாளைக்குதான் அறிவுரை செல்லி சொல்லி பக்கத்தை நிரப்பிக் கொண்டிருக்க முடியும்?. ஒரு வித்தியாசமான முயற்சியில் இறங்கினோம். புகைப்பிடிக்கும் அண்ணாமார், தம்பிமார், அங்கிள் மார், அப்புமார் எல்லோரையும் பிடித்து, நீங்கள் ஏன் சிகரெட் புகைக்கிறீர்கள், அதனால் வரும் பாதிப்பு என்னவென்பதை தெரிந்துதான் புகைக்கிறீர்களா என கேட்டோம்.

இதைக்கேட்ட எங்களை ஒன்றுமே தெரியாதவர்களைப் போல பார்த்துவிட்டு, அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? கீழே படித்துப்பாருங்கள்

### கெத்துக்காக

'என்னங்க நீங்க... சிகரெட் பிடிக்காம இப்ப எந்த ஆண்கள் இருக்கிறார்கள். தம் அடிக்கிற ஆண்களை தானே பெண்களும் விரும்புகின்றார்கள். நாங்கள் ஆண்கள் என்று கெத்தா சொல்றதென்டா சிகரெட்டும் ஒரு காரணம். வருத்தம் வரும் என்று சொல்லுறார்கள் தான். ஆனால் சிகரெட் பிடிக்காம இருந்தா போல வருத்தம் வராமலா விட்டு விடும். வரணும் என்று விதி என்றால் நோய் வந்து தான் தீரும்' என கெத்தாக பேசிக் கொண்டே சென்றார்கள்.

### வயதுக்கு வந்தோம்

20, 25 வயது இளவட்டங்கள் சொல்கிறார்கள் ' வயசுக்கு வந்திட்டம். நாங்கள் என்ன சின்ன பிள்ளைகளா? நமக்கு வயது வந்து விட்டது தானே . இனி ஒரு தம் கூட குடிக்கவில்லை என்றால் எப்பிடிங்க. ஒரு ஆண் என்றால் ஏதோ ஒரு வகையில கெட்ட பழக்கம் இருக்க தான் செய்யும். அது எங்களிடம் சிகரெட் குடிக்கிறதா இருக்கட்டுமே' அப்படி.

### முரட்டுக்காளைகள்

'பெண்களை அடக்கத்தான் பாவிக்கிறோம். இப்ப எல்லாம் கொஞ்சம் ரௌடி தனமாஞ் கரடு முரடாஞ் சிகரெட், தண்ணி என்டு இருக்கிற ஆண்களை தான் பெண்கள் மதிக்கிறார்கள். அது மட்டுமாங்க. இப்ப பெண்களுக்கு ஆண்கள் மீது கொஞ்சமும் மதிப்போ பயமோ இல்லை. இந்த போதைப் பொருள பாவிச்சா தான் அதற்கு பயந்தாவது வாயல வச்சிட்டு கொஞ்சம் மரியாதையா நடப்பாளுகள். அதனால்த்தான் இந்த தந்திரம்' என்று ஏதோ உலக மகா தந்திர வித்தகர்கள் போல் பேசுகிறார்கள் .

### கவலையை மறக்க

'என்னங்க ஒரு மனிதனா பிறந்திட்டால் எத்தனை விதமான பிரச்சினை இருக்கும். வேலைக்கு போனாலும் பிரச்சினை. போகாட்டியும் பிரச்சினை. போனால் உனக்கு நெடுக போடுறாளுகள். போகல என்றால் உழைக்க போகமா கிடக்குறியா என்று சண்டை போடுறாளுகள்.

வேலைக்கு போனா அங்க வேற பிரச்சினை. அதெல்லாத்தையும் கொஞ்ச நேரமாவது மறந்து இருக்க தான்இந்தசிகெரெட்.அதுஎவ்வளவு ஆறுதல் தரும். உங்களுக்கு என்ன தெரியும்' இப்படி கேட்பவனை கேனையனாக்கி விட்டு தமது வேலையை தொடர்கிறார்கள் இன்னும் சிலர்.

### பழக்க பட்டுட்டுதே

' என்ன தான் செய்யுறது. சின்ன வயதில இருந்து நண்பர்களா சேர்ந்து அடிக்க வெளிக்கிட்டோம். வளர்ந்தாப்பிறகு, தம் அடிச்சாத்தான் ஆம்பிள என்ற நினைப்பு வந்திட்டுது. அதுக்கு பிறகு தெரியும் தானேஞ் தம் அடிக்காவிட்டால் அன்று முழுதும் சாப்பாடு இல்லாம கிடக்கிற போல இருக்கும். சோ. இப்படியே குடிச்சு குடிச்சு பழக்கப்பட்டிற்று . இப்ப இத விட முடியவில்லை. தொடர்ந்து புகை பிடிக்கின்றோம்' என்கிறார்கள் கொஞ்சம் வயதில் மூத்த அங்கிள்மார்.

இவ்வாறு தாம் பழக்க படுத்திய பழக்கத்திற்கு ஒரு காரணத்தை கண்டுபிடித்து கூறும் ஆண்கள் ஏன் பழக்கப்படுத்திய புகைப்பிடித்தலினை விட முடியவில்லை என பார்ப்போம்.

புகையிலையை பொறுத்த மட்டில் நிக்கோட்டின் என்னும் அமிலப்பொருள் உண்டு. இது புகைப்பிடித்தலைதூண்டும்காரணியாகவும் உள்ளது. புகைப்பிடிக்கும் பொழுது இந்த நிக்கோட்டின் நுரையீரலில் இருந்து குருதிக்குள் அகத்துறுஞ்சப்படுகின்றது. குருதியில் கலக்கும் நிக்கோட்டின் சிறுநீரகங்களுக்கு மேலே காணப்படும் அதிரிகள் சுரப்பியில் தொழிற்பட்டு 'அட்றீனல் ' என்னும் சுரப்பினை தூண்டுகின்றது. இந்த ஹோமோர்ன் ஆனது இதயம் நுரையீரல் குருதிக் கலன்கள் போன்றவற்றில் தொழிற்படுகின்றது. இதனால் இதய துடிப்பு, குருதி அமுக்கம், சுவாச வீதம் போன்றன அதிகரிக்கின்றன. அத்துடன் குருதியில் உள்ள நிக்கோட்டின் மூளையை அடைந்து அங்குள்ள நிக்கோட்டின் வாங்கிகளில் தொழிற்பட்டு டோகனமன் என்னும் ஓமோன்கள் சுரப்பை தூண்டுகின்றது. இவ் இரசாயன பொருள் தான் வேறுபட்ட உள் உணர்வுகள் மனிதனில் உருவாக காரணமாகின்றது. இதுவே நிக்கோட்டனுக்கு மக்கள் அடிமையாகவும் காரணமாகின்றது. நிக்கோட்டினை தொடர்ந்து உள்ளெடுப்பதனால் அதன் தொழிற்பாட்டு தன்மை குறைந்து, கூடிய நிக்கோட்டினை உள்ளெடுப்பதற்கு தூண்டப்படுகின்றனர். ஏனெனில் உடலில் நிக்கோட்டினின் தொழிற்பாடு குறையும் போது உடலில் சில அசாதாரண மாற்றங்கள் நிகழ்கின்றன.

அவையாவன இதயதுடிப்பு குறைதல், மனதை ஒரு நிலைபடுத்தும் தன்மை குறைதல், மன அமைதியின்மை, தலையிடி, பசி அதிகரித்தல், நிறை அதிகரித்தல், மன அழுத்தம் போன்றன ஏற்படும். இவ் அறிகுறிகள் தான் ஆண்கள் புகைப்பிடித்தலை நிறுத்தாமைக்கு காரணமாகும்.

### புகைத்தலால் ஏற்படும் பாதிப்புக்கள்


நுரையீரல் அலர்ச்சி, நுரையீரல் புற்றுநோய், நுரையீரல் தொற்றுக்கள், இதய கோளாறுகள், காலில் ஏற்படும் மாறாத காயம், இரைப்பை குடல் சிறுநீரக புற்றுநோய், மறதித்தன்மை, கர்ப்பிணி தாய்மாருக்கான பாதிப்புக்கள் (குழந்தை குறை நிறையோடு பிறத்தல், கருக்கலைதல்)


இத்தனை நோய்களுக்கு பின்னால் புகைப்பிடித்தல் தேவையா? சிந்தியுங்கள் ஆண்களே. புகைபிடிக்கும் வாலிபர்களைத் தான் பெண்கள் விரும்புகிறார்கள் என்பதெல்லாம் சினிமாவில் மட்டுமே. நிஜத்தில் அப்படியல்ல. இளமையை சாதாரண உணர்வற்ற புகையால் எரித்துவிடாதீர்கள்.



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்







வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வட மாகாணத்தில் உள்ள தேசிய மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறவுள்ள பளு தூக்கும் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள வீர வீராங்கனைகளுக்கான இரண்டு நாள் செயல்முறை பயிற்சிப் பட்டறை கடந்த வாரம் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடந்தது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த செயல் முறை பயிற்சிப் பட்டறையில் இலங்கை தேசிய அணியின் பயிற்சியாளரும், முன்னாள் தேசிய சம்பியனுமான அத்துல கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார். இந்த பளுத் தூக்கும் பயிற்சி முகாமில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களை சேர்ந்த பாடசாலைகளின் வீரர்கள் பலந்து கொண்டனர்.

இந்த இரண்டு நாள் பயிற்சி முகாமில் ஐம்பத்தி ஐந்து ஆண் வீரர்களும் இருபது பெண் வீராங்கனைகளுமாக எழுபத்தைந்து பேர் கலந்து கொண்டனர்.

# யார் திருத்துவார் கீரிமலை கேணியை?

வரலாற்று பெருமை வாய்ந்த கீரிமலைக் கேணி முறையான பராமரிப்பின்றி அழிவடைந்து கொண்டு செல்கிறது. கீரிமலையுடன் இந்து மரபுகள் பின்னிக்கிடக்கின்றன. எனினும், இதனைக்கடந்து, தமிழர்களின் வரலாற்று பொக்கிசங்களில் ஒன்றாக அது உள்ளது. நமது தொன்மங்கள் பல முறையான கவனிப்பின்றி அழிந்த வரலாற்றின் தொடர்ச்சியாக கீரிமலையும் மாறிவிடக்கூடாதென்பதில் அனைவரும் அக்கறை செலுத்த வேண்டும்.

ஏற்கனவே சுனாமியினாலும் கீரிமலைக் கேணி பாதிக்கப்பட்டது. சுனாமித் தாக்கத்தால் கேணியின் சுவர்கள் உடைந்து சேதமடைந்ததுடன், கேணியின் படிக்கட்டுக்களும் சேதம் அடைந்தன.



கேணியின் சுவர்கள் மீள அமைக்கப்பட்டு திருத்தப்பட்ட போதிலும், உடைந்த படிக்கற்கள் திருத்தப்படவில்லை. யாரும் இதனைக் கவனிக்காத நிலையில், தற்போது சேதம் அடைந்த பகுதிகள் ஊடாக கடல்நீர் கேணியினுள் உள் புகத் தொடங்கியுள்ளது. இதனால் கேணியின் சுற்றாடல் பகுதியை கடல் அரிக்கத் தொடங்கியுள்ளது. இந்த தாக்கம் அதிகரித்து இப்பொழுது படிக்கற்கள் உடைந்து கேணியினுள் விழத் தொடஙகியுள்ளன.

ஆண்கள் குளிக்கும் கேணியில் உடைந்து வீழ்ந்த கற்களை தூக்கி வைத்து கட்டி, கேணியின் வரலாற்று முகம் மாறாத நிலையில் திருத்தப்பட வேண்டியது அத்தியாவசியமான கடமை.

வலி வடக்கு பிரதேசசபை, வட மாகாண சபை, யாழ் மாவட்ட செயலகம் என்பன உடனடியாக இதில் கவனம் செலுத்த வேண்டும். அல்லது, இந்து அமைப்புக்கள் தமது நிதியில் இருந்தேனும் இதனை திருத்தி கலாச்சார பண்புகள் மரபுகள் கெடாது பாதுகாக்க வேண்டியது அவசியம்.

6-ம் பக்கம் தொடர்ச்சி

விசாரணை ஒன்றை உள்ளடக்கிய தீர்மானமாக விருத்தியடைந்தது. இங்கும் தமிழர்தரப்பு பெற்றுக் கொண்டவெற்றிக்கு சுமந்திரனது சட்ட நிபுணத்துவமும், இராஜதந்திர செயற்பாடும் அத்தியாவசியமானதாக இருந்தது. ராஜபக்ச அரசின் கைக்கூலிகளாகச் செயற்பட்ட ஒரு சிலதமிழரது பொய்களை நம்பி சில தமிழ்க் குழுக்களைத்தவிர அனைத்துத் தமிழ்க் குழுக்களும் சர்வதேச விசாரணையை உள்ளடக்கி வந்த அமெரிக்க தீர்மானத்தை நிராகரித்தன. இலங்கையில் ஆட்சிமாற்றத்தை கொண்டுவரவே அமெரிக்கா தீர்மானத்தை கொண்டு வருவதாகவும்,இந்தத்தீர் மானத்தால் தமிழருக்கு எதுவித நன்மையும் கிடைக்கப்போவ தில்லை என்றும் மாற்றுப் பிரச்சாரத்தை இவர்கள் முன்னெடுத்தனர். இது ஜெனீவாவில் பலத்த குழப்பத்தைத் தோறுவித்தது. பலநாடுகள் தமிழர் தரப்புக் கூட எதிர்க்கும் ஒரு தீர்மானத்தை தாம் ஏன் ஆதரிக்கவேண்டும் என்று சிந்திக்கத்தொடங்கின. தம்மைத் தீவிர தமிழ்ப்பற்றாளர்களாகக் காட்டிக் கொண்டு ராஜபக்சவின் கைக்கூலிகளாக செயற்பட்டவர்களால் ஏற்பட்ட குழப்பத்தை எதிர்க்க சுமந்திரன் மும்முனைவியூகம் அமைத்துச் செயலாற்றினார். முதலாவது, ஜெனீவாத் தீர்மானத்தில் சர்வதேச விசாரணை அடங்கியிருக்கிறதென்றும் அதைத்தமிழர் ஆதரிக்க வேண்டும் என்றும் நியாயமான தமிழ்க்குழுக்களோடு பேசி அந்தக்குழுக்களின் ஆதரவினை பெற்றுக்கொண்டார். இரண்டாவதாக, மனிதஉரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தி அவர்களிடம் இலங்கைவாழ் தமிழர்களது ஆதரவு குறித்த தீர்மானத்திற்கு உண்டு என்பதை வெளிக்காட்டி, தீர்மானம் நிறைவேறவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். இலங்கைவாழ் தமிழ்மக்களது ஜனநாயகத் தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இந்தச் செய்தியைக் கொடுப்பதைமிகத் தெளிவாக வெளிநாடுகளுக்கு எடுத்துச் சொன்னார். பிரதானமாக ஜெனீவாவிலே இந்தக்காரியங்கள் நடந்த போதிலும், சுமந்திரன் பலநாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு அந்தநாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் பேச்சு நடாத்தி அவர்களது ஆதரவை வென்றெடுத்தார். உதாரணமாக, 2013 ஜெனீவாத் தீர்மானத்திற்கு வாக்களிக்காத பொஸ்ட்வானா சுமந்திரனது விஜயத்தின் பின்னர் 2014 தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தது. மேலும், இலங்கைக்கு ஆதரவாகவாக்களிக்க விருந்த நமிபியா சுமந்திரனது தலையீட்டின் பின்னர் வாக்கெடுப்பில் இருந்து ஒதுங்கிக்கொண்டது. இறுதியாக, அமெரிக்காவோடும், ஐக்கிய ராஜ்ஜியத்தோடும் இணைந்து, தீர்மானத்தின் ஆரம்ப வரைவின் உள்ளடக்கம் தொடர்பாக இரவு பகலாக விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டு தீர்மானத்திற்கு வலுவேற்றினார். பலவிடயங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளின் பட்சத்தில் நடாத்தப்பட்ட பேச்சுக்களின் பின்னரே இறுதித்தீர்மான வரைபில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஜெனீவாத்தீர் மானத்தை நிறைவேற்றியது மட்டுமல்லாது சர்வதேச விசாரணையின் வெற்றிக்கென சுமந்திரன் உள்நாட்டில் பரந்துபட்டசாட்சியம் திரட்டலிலும் ஈடுபட்டார்.



யஸ்மின் சூக்காவுடன் சுமந்திரன்

கொழும்பில் எதிரிமாற்றம் ஒன்றைக் கொண்டு வருவ தேசம் பந்தனின்திட்டத்தின் மூன்றாவது அங்கமாக இருந்தது. ராஜபக்ச அரசுதமிழரை முற்றிலும் நசுக்கத்தலைப்பட்டதைசம்பந்தன் உணர்ந்திருந்தார். அந்த அரசாங்கம் தமிழரது உரிமைகளை மறுப்பதையே, மிதிப்பதையே தனது பிரதான இலக்காகக் கொண்டு செயற்பட்டது. சம்பந்தனும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தெற்கில் உள்ள மாற்று சக்திகளுடன் இணைந்து மகிந்த ராஜபக்சவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரத் திட்டம்வகுத்தனர். இந்தவேலைத் திட்டம் இந்த வருடம் ஜனவரி 8 இல் இடம் பெற்ற தேர்தலுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டது. சந்தர்ப்பம் வாய்த்தபோது, சம்பந்தன் தலைமையில் தமிழர்கள் பெருவாரியாகச் சென்று தமது வாக்குகளைப்பதிவிட்டு மகிந்த ராஜபக்சவின் அரசாட்சிக் கனவுகளை தவிடுபொடியாக்கினர்.

இலங்கை வாழ் தமிழருக்கு சமாதானமானம் நிறைந்த, கௌரவத்துடன் கூடியநிறைவான வாழ்க்கைகிட்ட இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டியிருப்பினும் சம்பந்தனது தலைமை எமது எதிர்காலம் எங்கள்கைகளிலே தங்கியிருப்பதை சுட்டிநிற்கின்றது.



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்



# பொக்கிசங்களை பாதுகாப்போம்

யாழ்ப்பாணத்தின் மரபுகளாக எஞ்சியுள்ள சில கட்டிடங்களில் ஒன்றுதான் வடமராட்சி வதிரியிலுள்ள இந்த ஓய்வு எடுக்கும் இடம். வதிரியிலிருந்து உடுப்பிட்டி செல்லும் வீதியில் வீதியோரமாக தோட்டவெளிகளிற்குள் அமைந்துள்ள சிறிய கட்டிடம் இது. பயணிகள் மற்றும் தோட்டதொழிலாளர்கள் ஓய்வெடுப்பதற்காக அமைக்கப்பட்ட கட்டிடம் இது. யாழ்ப்பாணத்தின் பண்டைய கட்டிடங்கள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு விட்டது. எஞ்சிய சில பொக்கிசங்களில் இதுவும் ஒன்று.

பருத்தித்துறையின் தெருமூடிமடத்தைப் போன்ற பொக்கிசமானது.எனினும், இந்த கட்டிடத்தை பேணும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. இந்த பகுதியில் உள்ள இளைஞர்கள் இரவில் ஒன்றுகூடி மதுபானம் அருந்துவதற்கே அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நமது தொன்மையை நிரூபிக்கும் சான்றுகள் ஒவ்வொன்றையும் பேணிக்காப்பது நம் எல்லோரது கடமையும் ஆகும்.

வவுனியாவில் சகலவிதமான
அரிசிமா, மிளகாய் தூள் போன்றவற்றினை தரமான
முறையிலும் சுத்தமாக அரைத்து பெற்று கொள்ளவும்
அரைக்கபட்டு பொதி செய்யப்பட்ட அரிசிமா, மிளகாய் தூள்,
மசாலா தூள் போன்றவற்றினை மலிவான
விலையில் பெற்றிட சிறி மகா அரைக்கும் ஆலை
முருகனூர் பாம் சந்தி வவுனியா



உரிமையாளர் ஆர்.தியாகரஜா
தொலைபேசி 0773513024

## நிகழ்வுகள்

ஓகஸ்ட் 12 கொக்குவில் மஞ்சவனப்பகுதி முருகன் கொடி

ஓகஸ்ட 13 மாவிட்டபுரம் கந்தசாமி, மட்டக்களப்பு, அமிர்தகழிபிள்ளையார், வல்வெட்டித்துறை கப்பலுடைய பிள்ளையார் தேர்.

ஓகஸ்ட் 15 ஆவரங்கால்பருவதபர்த்தனியம்மை,புலோலி பருவபர்த்தனியம்மை, கொக்குவில் பொற்பதி விநாயகர், நாயன்மார்கட்டு ராஜராஜேஸ்வரி, வண்ணைவைத்தியேஸ்வரர் தேர்.

ஓகஸ்ட் 17 தெல்லிப்பளை துர்க்கா தேவி கொடி. வேலணை வங்களாவாடி ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமானின் தீர்த்தம் வேலணை சாட்டிகடற்கரையில் நடைபெறும்



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# பாராளுமன்றத்தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும்?

## பிரபல சோதிடரின் கணிப்பு!



| | | | |
|---|---|---|---|
| கேது | 10 | 11 | 12 |
| 8 | கிரகநிலை | | சூரியன் செவ் |
| 7 | 17.08.2015 | | குரு புத சுக் சந் |
| 6 | 5 | சனி | ராகு |

*1ல் சூரியன் பகை நிலை*
*1ல் செவ்வாய் நீசம் நிலை*
*2ல் குரு நட்பு நிலை*
*2ல் புதன் பகை நிலை*
*2ல் சுக்கிரன் பகை நிலை*
*2ல் சந்திரன் பகை நிலை*
*3ல் ராகு நட்பு நிலை*
*4ல் சனி உச்சம் நிலை*
*9ல் கேது நட்பு நிலை*

1. சூரியன் சந்திரன் பரிவர்த்தன நிலை.
2. செவ்வாய் சனியை 4ம் பார்வை செய்கிறது.
3. சனி செவ்வாயை 10ம் பார்வை செய்கிறது.
4. குரு சந்திரன் சேர்க்கை குரு சந்திர யோகம் தரும்.
5. குரு புதன் சுக்கிரன் சேர்க்கை 2ம் இடத்தில் கலாநிதி யோகம் தரும்.
6. 9 கிரகங்களில் சனி மட்டும் ராகுவுக்கு முன் அமைவது கால சர்வ யோக நிலை.

இவை எல்லாவற்றையும் கவனத்தில் கொள்வதுடன் அவரவர் கிரக அமைப்பு பிறப்பில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் பார்க்கவேண்டும். முன்சொன்ன ஆறு நிலைகளுடன் உள்ள கிரக அமைப்புக்களுடன் பிறந்துள்ளவர்கள் சிறப்புப் பலன் பெறுவர்.

முக்கியமான அவதானிப்பு: சூரியன் செவ்வாய் சேர்க்கை. சூரியன் பகை நிலை. செவ்வாய் நீசம் நிலை.

இது பலவிதமான கருத்து பேதங்கள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும். இதனால் பிரிவு நிலைகளும் உண்டாகும். ஸ்திரமான உறுதியான ஆட்சி நிலை அமைவது கடினமாகும். சூரியன் சனி செவ்வாய் உச்ச நிலையான ஆட்சி நிலை இருக்கப் பிறந்தவர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் கிடைக்கும்.

இலக்கின ரீதியில் இராசி ரீதியில்:
மேடம்: உத்தம நிலைகளைத் தரும்.
இடபம்: உத்தம நிலைகளைத் தரும்.
மிதுனம்: குறைவு நிலைகளைத் தரும்.
கடகம்: மத்திப நலைகளைத் தரும்.
சிங்கம்: உத்தம நிலைகளைத் தரும்.
கன்னி: குறைவு நிலைகளைத் தரும்.
துலாம்: உத்தம நிலைகளைத் தரும்.
விருச்சிகம்: குறைவு நிலைகளைத் தரும்.
தனு: உத்தம நிலைகளைத் தரும்.
மகரம்: மத்திப நலைகளைத் தரும்.
கும்பம்: மத்திப நலைகளைத் தரும்.
மீனம்: குறைவு நிலைகளைத் தரும்.


இவற்றைத் தேர்தலில் நிற்கும் வேட்பாளர்கள் கவனத்தில் கொண்டு தங்களது பெறுபேறுகளை தீர்மானம் செய்யலாம். இனதை விட சனிமாற்றம் வியாழமாற்றம் மற்றும் 17.08.2015 திங்கட்கிழமை உள்ள கிரக அமைப்பின் பிரகாரம் பின்வரும் பொதுவான பலன்களையும் எமது நாடு எதிர்கொள்ளும் இடமுண்டு.


1. ஏந்தவொரு பெரும்பான்மைக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை வெற்றி கிடைப்பது மிகமிகக் கடினம்.
2. போட்டியிடும் பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டும் ஆட்சி அமைப்பது தொடர்பில் பலமான இழுபறி நிலைக்கு தள்ளப்படும்.
3. 2015 டிசம்பர் மாதத்திற்குப் பின்னர் சில அமைச்சர்கள் பதவி விலக இடமுண்டு.
4. 2017க்கு சற்று முன்பின்பாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தலை எதிர்கொள்ளும்.
5. பாராளுமன்றத்திற்கு சில புதிய முகங்கள் முதன்முதலாக தெரிவாவதற்கு இடமுண்டு. (இந்தத் தேர்தலில்)
6. சிறிய கட்சிகள் உட்பட பெரிய கட்சிகள் என்பவற்றில் உறுப்பினர்களிடையே முரண்பாடுகள் வலுவடைந்து காணப்படும். சிலர் வெளியேறவும் கூடும்.
7. சில சிறிய கட்சிகள் உட்பட பெரிய கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் மக்களால் நிராகரிக்கப்படுவர்.
8. ஆகக் குறைந்த வாக்க வீதம் 53 வீதமாகவும் ஆகக் கூடுதலான வாக்கு வீதம் 63 வீதமாகவும் அமையும்.
9. வாகனம் இயந்திரம் உதிரிப்பாகம் தொழிநுட்பம் மின்சாரம் எரிபொருள் இரும்பு போன்ற விடயங்களில் அரசு கவனம் செலுத்த வேண்டிய நிலைக்கத் தள்ளப்படும்.
10. சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களிடையே ஒருமித்த ஒற்றுமை இல்லாமல் பல்வேறுபட்ட முரண்பாடுகளும் பொது உடன்பாடு ஒன்றை எதிர்கொள்வதில் மிகமிகக் கடினமான நிலைகளை நாடு எதிர்கொள்ளவும் பலன் செய்யும்.
11. பெண்கள் பிரதிநிதிர்துவம் முன்னரை விட அதிகமாகும்.
12. ஒவ்வொரு கட்சியும் தங்களது எதிர்பார்ப்பு வாக்கு வங்கியிலும் உறுப்பினர் எண்ணிக்கையிலும் 15 முதல் 21 வீதம் குறைவாகப் பெறுவதற்கும் இடமுண்டு.

**தி.இராசநாயகம் வவுனியா**

# நல்லூர் கொடிசீலை காளாஞ்சி

நல்லூர் ஆலய திருவிழாவிற்கு முன்னதான கொடிச்சீலை காளாஞ்சி எடுத்து வரும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது.









கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பலப்படுத்துங்கள்

## கனடிய தமிழ் பேரவை வேண்டுகோள்

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் சிறீலங்காவில் வாழும் குடிமக்களையும் தமிழர்களையும் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்துமாறு கனடிய தமிழர் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது. அத்துடன் தமிழ்தேசிய கூட்டமைப்பின் கரங்களை பலப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

அறிக்கை ஒன்றின் மூலம் கனடிய தமிழர்பேரவை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

'கடந்த சனவரி 08, 2015 இல் நடந்த சனாதிபதி தேர்தல் சிறீலங்காவின் அண்மைக்கால வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். வாக்காளர்கள் பெருமளவில் திரண்டு (ஆட்சி) மாற்றத்துக்கும் ஒரு புதிய தொடக்கத்துக்கும் வாக்களித்தார்கள். இந்த மாற்றத்தை கனடாவும் அனைத்துலக சமூகமும் கவனத்தில் எடுத்துக் கொண்டு அதனை வரவேற்றன. இருந்தும் சிறீலங்காவின் பொறுப்புள்ள குடிமக்களுக்கும் ஒரு கடமை இருக்கிறது. அது யாதெனில் இம்மாற்றம் புறமாற்றலுக்குத்தள்ளப்படுவதற்கு வாய்ப்பளிக்காதவாறு ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

காணியுரிமை அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் போனோர் முதலிய தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் சிக்கல்கள் எதிர்பார்த்தது போல தீர்க்கப்படவில்லை. இருந்தும் இப்போதுள்ள அரசாங்கம் எடுத்த சில நடவடிக்கைகள் (சனாதிபதி) தேர்தல் முடிவு நல்லெண்ணத்துக்கான தொடக்க குறிகளைக் காட்டியது. ஓகஸ்ட் தேர்தலுக்குப் பின்னர் வரவுள்ள அரசின் நடவடிக்கைகள் புதிய அரசியல் நன்னம்பிக்கை மேலும் வலுத்தப்படலாம் என கனடிய தமிழர் பேரவை நம்புகிறது.




தமிழின சிக்கலுக்கு தீர்வு காண்பதற்குப் பொருள் பொதிந்த பேச்சு வார்த்தைகள் சிறீலங்கா அரசுக்கும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கும் மற்றும் அதில் அக்கறையுடையோருக்கும் இடையில் நடைபெற்றே ஆகவேண்டும். இப்படியான சூழலில் தமிழ்மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் காத்திரமான பங்கு வகிப்பர். இத்தகைய பேச்சு வார்த்தைகளில் தமிழர் சார்பாக ஒரே குரலில் வலுவான முறியில் பேசப்படும்போது அது காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு பொறுப்பும் அனுபவமும் வாய்ந்த திரு இரா. சம்பந்தன் அவர்கள் தலைமையில் தமிழ் மக்களது அங்கீகாரத்தை மட்டுமல்ல சிறீலங்காவில் உள்ள ஏனைய சமூகங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கனடா அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற பன்னாட்டு சமூகத்தின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. அவர் தமிழ்மக்களது கவலைகள் குறைகள் மற்று தமிழ்மக்களின் வேட்கை போன்றவற்றை மிகவும் கவனமாகவும் தொடர்ச்சியாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறி வந்திருக்கிறார்.

கனடிய தமிழர் பேரவை தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு நெருங்கிச் செயல்பட்டுகிறது. இந்தக் கூட்டுறவு கனடா மற்றும் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கிடைக்கப்பெற்ற இராஜதந்திர வெற்றிகளுக்கு மிக முக்கிய காரணியாக விளங்கியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்டம் மற்றும் வெளியுறவுச் செயலாளராக இருக்கும் திரு எம்.ஏ.சுமந்திரனின் வழக்காடும் வாதத் திறமைகள் பட்டறிவு மற்றும் நிபுணத்துவம் கனடாவில் உள்ள பல அரசாங்க அதிகாரிகள் ஜெனிவா மற்றும் உலகில் உள்ள இராஜதந்திரிகள் போன்றோரைச் சந்திங்கும் போது கனடிய தமிழர் பேரவை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டுக்கும் பயனுள்ளதாக இருந்தது.

பேச்சுவார்த்தை நடைபெறும் காலத்தில் எமது நிலைப்பாட்டை வலுப்படுத்துவதற்கு வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ்மக்களைப் பிரதிநித்துவப்படுத்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குவலுவான ஆணை கொடுக்கப்படும் என்று கனடிய தமிழர் பேரவை உறுதியாக நம்புகிறது.

தென்னிலங்கையில் சனநாயகம் மற்றும் நல்லாட்சிக்குக் குரல் கொடுக்கும் முற்போக்கு சக்திகளின் வெற்றியானது இலங்கையில் பேச்சுவார்த்தை மூலம் ஒரு அரசியல் தீர்வு பொறுப்புக் கூறல் மற்றும் நீடித்த நல்லிணக்கம் ஆகியவை கைகூடுவதற்கான பெருவாய்ப்பு இருக்கிறது.

# 200 வருட விழாவில் யாழ் மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200வது ஆண்டு விழாவின் ஆரம்ப நிகழ்வுகள் கடந்த வாரம் ஆரம்பமாகின. 01.08.2015 சனிக்கிழமை காலை 8மணிக்கு கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நிகழ்வுகள் நடந்தன. ஆரம்ப நிகழ்வுகளில் யாழ்மெதடிஸ் தேவாலயத்தில் விசேட பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து கல்லூரியின் றொமைன்குக்மண்டபத்தில்நிகழ்வுகள் ஆரம்பமாகியது . நிகழ்விற்குக்கு பிரதமவிருந்தினராக கல்லூரியின் பழையமாணவனும் ஒலிம்பிக் வீரரருமாகிய கலாநிதி என்.எதிர் வீரசிங்கம் கலந்துகொண்டார்.

கல்லூரியின் நிறுவுனர் முன்னாள் அதிபர் வண . லின்ஸ்ஸின் திருவுருச் சிலைக்கான மலர் மாலையினை கலாநிதி என்.எதிர்வீரசிங்கம் அணிவித்தார்.

கல்லூரியின் 200வது ஆண்டு விழா நிகழ்வுகள் 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரை ஒவ்வொரு மாதமும் விசேட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





இப் பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேட்) லிமிற்ரட் நிறுவனத்தினரால் இரத்மலானை,
ஸ்ரீ தர்மராம வீதியில் இல 59 இல் உள்ள எடிசன் அட்வரைசிங் நிறுவனத்தாரின் அச்சகத்தில் 11.08.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது